அன்பான மாணவா்களை மீண்டும் சந்திப்பதில் பெரு மகிழ்வடைகிறேன். இக்கட்டுரைத் தொகுப்பு 2002 ஆம் ஆண்டு ஐம்பது கட்டுரைகளுடன் சிறுவா் பாடல்களையும் மொழிவிருத்தியையும் கொண்டு வெளி வந்தது. தற்பொழுது நூறு கட்டுரைகளுடனும் மொழிவிருத்தியுடனும் லங்கா புத்தக சாலையின் வெளியீடாக உங்களின் கரங்களுக்குக் கிடைத்துள்ளது.

நான் முப்பது வருடங்களாகச் சிறுகதைகளும் நாவல்களும் எழுதி வருகிறேன். அத்துடன் பதவிகள் பெறவும் பதவிஉயா்வு பெறவும் தரம் ஐந்துப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையவும் பல புத்தகங்களை எழுதியுள்ளேன். அதற்காகப் பல பரிசுகளும் பெற்றுள்ளேன்.நான்எழுதிய ஆத்திசூடிக் கதைகள் கோலாலம்பூரில் நடைபெற்ற உலக சைவ மகா நாட்டில் வெளியிடப்பட்டது. தற்பொழுது திருக்குறள் கதைகள் 210 ஏழு புத்தகங்களாக வெளி வந்துள்ளது. மிகுதிக் குறள்களுக்கான கதைகள் வெளிவர உள்ளன.

தரம் ஐந்து மாணவா்கள் புலமைப்பரிசல் பரீடசைக்குக் கட்டுரை எழுதுவது மிகக்குறைவு எழுதுபவா்களும் இரண்டொரு வசனங்கள் மட்டுமே எழுதுகிறாா்கள். 2002 ஆம் ஆண்டு இக்கட்டுரைப் புத்தகத்தில் உள்ள மாதிரி வடிவமே வந்தது. 2004 ஆம் ஆண்டு இப் புத்தகத்தில் உள்ள கட்டுரையே பரீட்சைக்கு வந்தது. தற்பொழுது தரம் ஐந்தின் ஆசிரியா் கைநுாலில் உள்ள ஐம்பது கட்டுரைகளை இதில் சோ்த்துள்ளேன். இப் புத்தகத்தில் உள்ள கட்டுரை அல்லது இப்புத்தகத்தில் உள்ளதைப் போன்றதொரு கட்டுரையே 2005 ஆம் ஆண்டும் வரும்.

தரம் 3, 4, 5 ஆசிரியா் கைநூல்களை மிக நுணுகி ஆராய்ந்து பல்வேறு வடிவங்களில் இக்கட்டுரைகளை எழுதியுள்ளேன். கைநுால்களை ஆராய்ந்து ஆக்கபூா்வமான பல ஆலோசனைகளை வழங்கிய கோப்பாய் நாவலா் வித்தியாலயத்தின் பிரதி அதிபா் திருமதி சாந்தினி வாகீசன் அவா்களுக்கும் இதைக் கணனியில் அச்சுப் பதிவு செய்து தந்த செல்வி க. சுகந்தினிக்கும் இதை வெளியிடும் லங்கா பதிப்பகத்திற்கும். எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

01/10/2004

**கே.வி.குணசேகரம்**
**அதிபா்**
**நாவலா் தமிழ் வித்தியாலயம்**
**கோப்பாய்.**

**1) அன்று நிர்மலாவும் மஞ்சுளாவும் எனது வீட்டுக்கு வந்தனர். அவர்கள் வரும் போது தொலைக்காட்சியில் பாம்புகளைப் பற்றிய வாழ்க்கை வரலாறு காண்பிக்கப்பட்டது. நீரில் நீந்தி விளையாடிய ஒரு பெரிய பாம்பை வர்ணணையாளர் பிடித்தார்......... தொடர்ந்து ஆறுவாக்கியங்கள் எழுதி இவ்விவரணத்தை முடிக்குக.**

- ❖ அதைப் பார்க்க எனக்குப் பயமாகவும் அருவருப்பாகவும் இருந்தது.
- ❖ நிர்மலாவும் மஞ்சுளாவும் பயத்தினால் கண்களை மூடினர்.
- ❖ பாம்பைப் பிடித்தவர் அதன் வாயைத் தான் வைத்திருந்த தடி போன்ற ஆயுதத்தால் திறந்தார்.
- ❖ பாம்பின் வாய்க்குள் கூரிய பற்கள் இருந்தன. அதைப் பார்க்க எனக்குப் பயமாக இருந்தது.
- ❖ வேறு பல பாம்புகள் அந்த நீரோடையில் நீந்திக் கொண்டிருந்தன.
- ❖ மிகவும் நீண்ட பாம்புகள் நீரில் நீந்தி விளையாடும் போது மிகவும் அழகாக இருந்தது. அவை புற்களுக்குள் மறைவதும் பின் வெளிப்படுவதுமாக இருந்தன.
- ❖ வர்ணணையாளரை அவை கடித்து விடுமோ என நாங்கள் பயந்தோம்.
- ❖ வர்ணணையாளர் ‘‘இப்பாம்புகள் பத்து வருடங்கள் உயிர் வாழும் அவை நீரில் வாழும் உயிரினங்களைப் பிடித்து உண்ணும்’’ என்று சொன்னார்.

**2) பாடசாலையை விட்டு ரவியும் பாலாவும் காந்தனும் வந்தனர். வீதியில் ‘‘வாழைப்பழம் ,மாம்பழம், தோடம்பழம்’’என்று கூவியபடி பழ வியாபாரி ஒருவர் வந்தார். தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதி இச் சம்பவத்தை முடிவு செய்க.**

- ❖ காந்தன் பழ வியாபாரியை மறித்தான். அவனது பழக் கூடைக்குள் ஏராளமான பழங்கள் இருந்தன. விலாட், கறுத்தக்கொழும்பான், அம்பலவி போன்ற பல இன மாம்பழங்கள் இருந்தன.
- ❖ கப்பல் வாழைப்பழம் என்ன விலை? என்று பாலா கேட்டான்.
- ❖ ‘‘ஒன்று எட்டு ரூபா தம்பி’’ என்றார் பழ வியாபாரி
- ❖ காந்தன் பணத்தைக் கொடுத்து மூன்று கப்பல் வாழைப் பழங்களை வாங்கினான்.
- ❖ தான் ஒன்றை எடுத்துக் கொண்டு மற்றய இரண்டு பழங்களையும் பாலாவுக்கும் ரவிக்கும் கொடுத்தான்.
- ❖ பாலாவும் ரவியும் காந்தனுக்கு நன்றி சொன்னார்கள்.
- ❖ மஞ்சள் நிறத் தோடம் பழங்கள் பல இருந்தன.

- ❖ பெரிய விளாம் பழங்களும் அவனிடம் இருந்தன.

**3) சிவாவும் ரவியும் வீட்டுக்குப் பிரதான வீதி வழியாக வந்து கொண்டிருந்தனர். அப்பொழுது வயோதிபர் ஒருவர் பொல்லூன்றியபடி பிரதான வீதியைக் கடக்க முயன்றார். சிவாவும் ரவியும் அவரின் அருகே ஓடிச் சென்றனர். தொடர்ந்து ஆறுவாக்கியங்கள் எழுதி இச் சம்பவத்தை முடிக்குக.**

- ❖ ''அப்பா எதிரே வாகனம் வருகிறது கவனிக்காமல் வீதியைக் கடக்கிறீர்கள். வீதியைக் கடக்கு முன் வலது பக்கம் பார்க்க வேண்டும். பின் இடது பக்கம் பார்க்க வேண்டும். பின் வலது பக்கம் பார்த்துத் தான் கடக்க வேண்டும்''என்று கூறியபடி சிவா முதியவரின் இடது கையைப் பிடித்தான்.
- ❖ ரவி முதியவரின் வலது கையைப்பிடித்தான்.''கவனமாக நடந்து வாருங்கள் வீதியின் குறுக்காக மஞ்சள் கோடிட்ட பகுதியால் தான் வீதியைக் கடக்க வேண்டும்'' என்றான் ரவி.
- ❖ ''முதியவர்களை மதித்து அன்பு காட்டும் நீங்கள் நன்றாக இருப்பீர்கள் மிகவும் நல்ல பிள்ளைகள்''என்றார் அந்த முதியவர்.
- ❖ சிவாவும் ரவியும் நன்றி கூறினர்.

**4) நண்பனின் பிறந்த தினத்திற்கு நானும் ரவியும் சென்று...**

- ❖ எனது நண்பனான விமலின் பிறந்த தினத்திற்குப் பரிசுப் பொருட்களுடன் நானும் ரவியும் சென்று அவனை வாழ்த்தினோம்.
- ❖ நான் கொண்டு சென்ற பரிசுப் பொருளை விமலிடம் கொடுத்தேன்.
- ❖ ரவியும் தான் கொண்டு வந்த பரிசுப் பொருளை விமலிடம் கொடுத்தான்.
- ❖ விமல் இருவருக்கும் நன்றி சொன்னான்.
- ❖ வீடு மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.
- ❖ விமல் மிகவும் அழகான உடை அணிந்திருந்தான்.
- ❖ விமல் எமக்கு சிற்றுண்டியும் குளிர்பானமும் தந்தான்.
- ❖ பெரும் தொகையான உறவினர்களும் நண்பர்களும் அங்கு வந்திருந்தனர்.
- ❖ விமலின் தாயும் தகப்பனும் விமலுக்குப் பரிசுப் பொருட்களைக் கொடுத்து முத்தமிட்டனர்.
- ❖ நானும் ரவியும் விமலின் அருகில் நின்று புகைப்படம் பிடித்தோம்.

**5) பேரூந்தில் நண்பர்களுடன் பிரயாணம் செய்த போது**

- ❖ பேரூந்து வண்டியில் நான் நண்பர்களுடன் பிரயாணம் செய்த போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். நண்பர்கள் சினிமாப்பாடல்களை மேளமடித்துப் பாடினார்கள்.
- ❖ பேரூந்து மிகவும் வேகமாகச் சென்றதால் நின்று பிரயாணம் செய்த நண்பர்கள் முன்னும் பின்னும் ஆடினார்கள்.
- ❖ எனது நண்பர்கள் சிலர் பேரூந்தின் கண்ணாடியூடாக வெளியே எட்டிப் பார்த்தனர்.
- ❖ நடத்துனர் தலையை உள்ளே எடுக்கும்படி கூறினார்.
- ❖ எனது நண்பனான மாறன் தலை சுற்றுகிறது என்றான்.
- ❖ அவனை எனது மடியில் படுக்கும் படி கூறினேன்.
- ❖ நீண்ட தூரம் சென்ற போதும் நண்பர்களுடன் சென்றதால் களைப்புத் தெரியவில்லை.

**6) உடற் பயிற்சி செய்வதன் அவசியம் பற்றி நாதன் உடற் கல்விக்கழகத்தில் பேசினான்.**

- ❖ உடற் பயிற்சி செய்வதன் அவசியம் பற்றி நான் இங்கு பேச வந்துள்ளேன். உணவைப்போல மனிதனுக்கு உடற் பயிற்சி செய்வதும் அத்தியாவசியமானது.
- ❖ உடற் பயிற்சி செய்வதன் மூலம் எமது உடலில் உள்ள கழிவுகள் யாவும் வெளியேற்ப் படுகின்றன.இரத்தம் சுத்தமடைவதால் நோய்கள் வராது.
- ❖ உடற் பயிற்சி செய்வதன் மூலம் உடல் உறுதியடையும். ஆரோக்கியமான நிண்ட வாழ்வு கிட்டும் மூளை விருத்தியடைவதால் அறிவு பெருகும்.
- ❖ உடற் பயிற்சி செய்வதன் மூலம் உற்சாகமாக வாழலாம். எனவே மாணவர்களாகிய நீங்கள் தினமும் உடற் பயிற்சி செய்யுங்கள்.

**7) கிராமிய விளையாட்டு ஒன்றைப் பற்றி எழுதுக.**

கிராம மக்கள் தமது பாரம்பரியங்களுக்கேற்ப தமக்கேற்ற விளையாட்டுக்களை விளையாடுவார்கள். கிட்டிப்புள்,கிளித்தட்டு, எல்லே போன்ற பல விளையாட்டுக்களை கிராமிய விளையாட்டுக்கள் என்று கூறுவார்கள். இவ்விளையாட்டுக்கள் கிராமங்களுக்குக் கிராமம் விளையாடும் முறைகள் வேறு பட்டிருந்தன. இவ்விளையாட்டுக்கான விதிமுறைகள் ஒழுங்காக அமைக்கப்படவில்லை. இதனால் கிராமமக்களுக்கிடையே சண்டை சச்சரவுகள் வந்தன. இப்பொழுது கிளித்தட்டு ,எல்லே போன்ற கிராமிய விளையாட்டுகளுக்கு விதிகள் அமைக்கப்பட்டு விட்டன. இதனால் மக்கள் இன்று மகிழ்வுடன் இக் கிராமிய விளையாட்டுக்களை விளையாடுகிறார்கள்.

**8) பாடசாலை விடுதியில் தங்கிப் படிக்கும் மாறன் என்ற மாணவன் பாடசாலைச் சுற்றுலாவுக்குப் பணம் அனுப்பும் படி தன் தந்தைக்கு எழுதிய கடிதம்.**

யா/ சிவபுரம் மகா வித்தியாலயம்,
மாந்தோப்பு,
07/ 05/ 2005.

அன்பு நிறைந்த அப்பா, அம்மா, மற்றும் தம்பி அறிவது. நான் இவ்விடம் மிகவும் நலமாகவும் மகிழ்வாகவும் இருந்து கல்வி கற்கிறேன். நீங்களும் நலமாக வாழ வேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

அடுத்த மாதம் ஐந்தாம் திகதி எமது பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலாவொன்றிற்க்குச் செல்கின்றனர். அனுராதபுரம், சிகிரியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குச் செல்லவுள்ளோம். அதற்குக் கட்டணம் ஆயிரம் ரூபா. அதைத் தயவு செய்து அனுப்பி வைக்கவும். நான் நன்றாகப் படிக்கிறேன். கணிதத்திற்கும் தமிழிற்கும் எனக்குத் தான் கூடிய புள்ளிகள் கிடைத்தன. உடன் பதில் போடவும்.

வணக்கம்

இப்படிக்கு,
அன்புள்ள மகன்,
அ.மாறன்.

**9) நானும் ரவியும் பாலாவும் சனசமூக நிலையத்தில் நடை பெற்ற சிறுவர் தினவிழாக்குச் சென்றோம். பிரதமவிருந்தினர் "சிறுவர்கள் மென்மையானவர்கள்.." என்று பேசிக் கொண்டிருந்தார். தொடர்ந்து அவர் பேசியதை ஆறு வாக்கியங்களில் எழுதுக.**

- ❖ சிறுவர்கள் தான் எமது எதிர்காலச் செல்வம். எனவே அவர்களின் நல்வாழ்வில் நாம் அக்கறை கொள்ளுதல் வேண்டும் அவர்களது தேவைகளை உடனுக்குடன் கவனித்துத் தினமும் பாடசாலைக்கு அனுப்புதல் வேண்டும்.
- ❖ ஐந்து வயது தொடக்கம் பதின்நான்கு வயது வரையுள்ள பிள்ளைகள் கட்டாயமாகப் பாடசாலைக்குச் செல்லல் வேண்டும்.
- ❖ இந்த வயதிற்குட்பட்ட பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பாதிருப்பது மாபெரும் குற்றமாகும்.
- ❖ பிள்ளைகளை வேலைக்கு அனுப்பக்கூடாது. அவர்களைத் தண்டிக்காது அன்புடன் அரவணைத்துப் புத்திமதிகள் சொல்லல் வேண்டும்.
- ❖ அவர்களுக்குச் சிறுவயதில் மனமுறிவு ஏற்பட்டால் வளர்ந்த பின்பும் அது அவர்களைப் பாதிக்கும்.

- ❖ எனவே சிறுவர்களை அன்பாகப் பராமரியுங்கள்

**10) டெங்கு பற்றிய சுவரொட்டி ஒன்று பாடசாலையின் விளம்பரப் பலகையில் ஒட்டுவதற்காக மாலாவும் சரண்யாவும் தயாரித்தனர். எமது கிராமத்தில் நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நோய் உண்டாகும் அபாயம் உள்ளது. தொடர்ந்து ஆறு வசனங்கள் எழுதி சுவரொட்டியைப் பூர்த்தி செய்க.**

- ❖ டெங்கு காய்ச்சல் ஈட்ஸ்ஈஜிப்டஸ், ஈட்ஸ்என்போரிக்கடஸ் என்னும் நுளம்புகளால் பரவுகிறது.
- ❖ பெண் நுளம்புகளே டெங்குக் காய்ச்சல் ஏற்பட முக்கிய பங்கு வகிக்கின்றன.
- ❖ இநத் நுளம்புகள் மாலை நேரங்களில் தான் மக்களைக் கடிக்கின்றன.
- ❖ அதனால் வீட்டில் உள்ள குப்பைகளை எரியுங்கள் அல்லது கிடங்கு வெட்டித் தாழுங்கள்.
- ❖ நீர் தேங்கக் கூடிய பாத்திரங்கள் சிரட்டைகள் ,ரயர்கள் போன்றவற்றை அப்புறப்படுத்துங்கள்.
- ❖ இந்நோயினால் தாக்கப்பட்டவர்களுக்கு எப்போதும் வயிற்று வலி இருக்கும். மல சலத்துடன் இரத்தம் போகும்.
- ❖ மூக்கினால் இரத்தம் வழியும் முரசு வாய் வழியாகவும் இரத்தம் வரும்.
- ❖ மலம் கறுப்பு அல்லது மண்ணிறமாக இருக்கும்.
- ❖ இவ் அறிகுறிகளை உடையவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லவும்

**11) கீதனும் மாலதியும் வளவனும் விளையாடுவதற்காகப் பாடசாலையின் மைதானத்திற்குச் சென்றனர். மைதானத்தில் பிளாஸ்ரிக் பைகள் பல இருந்தன. காற்று வீசும் போது அவை வானத்தை நோக்கிப் பறந்தன. ‘‘வீட்டில் இருந்து மதிய உணவு கொண்டு வருவோர் பிளாஸ்ரிக் தாள்களிலும் ,பைகளிலும் கொண்டு வருவதைத் தவிர்க்க வேண்டும்’’ என்றான் கீதன். தொடர்ந்து பிளாஸ்ரிக் பொருட்களால் சூழல் மாசடைகிறது என்பது பற்றி மாலா கூறினாள். அவன் கூறியவற்றை எழுதுக....**

- ❖ பிளாஸ்ரிக் பொருட்கள் இலகுவில் உக்காததால் மண்வளம் பாதிக்கப்படுகிறது.
- ❖ பிளாஸ்ரிக் பொருட்கள் இரசாயனத்தன்மை வாய்ந்தமையால் மண்ணை வளமிளக்கச் செய்யும்
- ❖ பிளாஸ்ரிக் பொருட்களில் நீர் தேங்கி நிற்பதால் டெங்கு மலேரியா போன்ற நோய்கள் வரும்.
- ❖ பிளாஸ்ரிக் பைகளை மாடுகள் உண்பதால் அவற்றிற்கு நோய்கள் உண்டாகும்.

- ❖ பிளாஸ்ரிக் பொருட்களை எரித்தால் துர்நாற்றம் வீசும்
- ❖ அப்புகை காரணமாக சூழல் மாசடையும்
- ❖ பிளாஸ்ரிக் பைகள் காற்றில் பறப்பதால் அவற்றை ஓரிடத்தில் கழிவாகவும் சேமித்து வைக்க முடியாது.
- ❖ பிளாஸ்ரிக் பொருட்களால் மனிதர்களின் ஆரோக்கியம் கெடும்.
- ❖ எனவே பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையை மக்கள் தவிர்க்க வேண்டும்.

**12) ரவி, கலா, மாலா, ஆகியோர் முத்திரை சேகரிக்கும் பழக்கத்தை உடையவர்கள். அன்று பாடசாலையில் மூவரும் தாம் சேகரித்த முத்திரைகளைக் கொண்டு வந்தனர். "கமலா நிறைய முத்திரைகள் சேகரித்து வைத்திருக்கிறாள். என்னிடமில்லாத முத்திரைகளைத் தருவாயா....?" என்று கேட்டான் ரவி தொடர்ந்து ஆறு வசனங்கள் எழுதுக.**

- ❖ "ஓ தருவேனே என்னிடம் ஜேர்மன் நாட்டின் முத்திரைகள் நிறைய உண்டு. அவுஸ்ரேலியா நாட்டில் உள்ள அழகானஅந்துாரிய முத்திரைகள் ஐந்து என்னிடம் உள்ளன.
- ❖ உங்களிடம் அவை இல்லாவிட்டால் தருகிறேன். சில நாட்டு முத்திரைகள் என்னிடம் இல்லை.
- ❖ உன்னிடம் கனடா நாட்டு முத்திரை இருந்தால் தா
- ❖ சீனா நாட்டினதும் யப்பான் நாட்டினதும் முத்திரைகள் அழகானவை என்று கூறுகிறார்கள்
- ❖ அந்நாடுகளில் எனது உறவினர்கள் இல்லாததால் பேனா நண்பன் ஒருவனுக்கு அவற்றை அனுப்பச் சொல்லி எழுதியுள்ளேன்.
- ❖ உன்னிடமில்லாத முத்திரைகள் இவற்றில் இருந்தால் எடுத்துக் கொள்.

**13) பாடசாலையில் பூந்தோட்டம் அமைத்தல்**

எமது வகுப்பாசிரியர் அதிபரின் அனுமதியோடு பூந்தோட்டம் அமைக்க விரும்பினார். நாம் ஆசிரியர் காட்டிய இடத்தைத் துப்புரவு செய்தோம். எமது வகுப்பில் உள்ள பத்து மாணவர்கள் சாடிகள் கொண்டு வந்தனர். பலர் எருவும் உரமும் கொண்டு வந்தனர். சாடிக்குள்ளும் நிலத்திலும் நாம் எருவை இட்டு பூவிதைகளையும் தடிகளையும் நட்டு நீரூற்றினோம். ஒரு மாதத்தின் பின் அவை தழைத்துக் குளிர்மையாக நின்றன. அவற்றிற்கு உரமிட்டு நீர் பாய்ச்சினோம். மூன்று மாதங்களின் பின் அவை பூத்தன. இப்பொழுது பாடசாலைக்குத் தேவையான பூக்களை நாம் எமது பூத் தோட்டத்தில் இருந்தே பெறுகிறோம்.

**14) வெள்ளிக்கிழமை இரவு எட்டு மணிக்கு பெண் அறிவிப்பாளர் ஒருவர் செய்தி வாசித்தார். "தலைப்புச் செய்திகள் இன்று ஜனாதிபதி அனுராதபுரத்தில் வீட்டுத் திட்டமொன்றை ஆரம்பித்து வைத்தார். இலங்கை கிரிக்கெட் அணி**

**தென்னாபிரிக்க அணியை 313 ஓட்டங்களால் வென்றது. தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

- ❖ வீடற்றவர்களின் எண்ணிக்கை அனுராதபுர மாவட்டத்தில் அதிகரித்துக் கொண்டு செல்கிறது.
- ❖ அதைக் குறைக்கும் நோக்குடன் ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தை இன்று ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கிறார்.
- ❖ இதேபோல் நாட்டில் உள்ள ஏனைய மாவட்டங்களிலும் வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ இவ்விழாவில் ஜனாதிபதியுடன் பிரதமரும் அனுராதபுர நகரபிதாவும் பௌத்த குருமாரும் கலந்து கொள்கின்றனர்.
- ❖ கொழும்பில் இருந்து கண்டிக்குச் சென்ற பஸ் வண்டி ஒன்று விபத்துக்குள்ளானதால் பத்துப் பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏழுபேர் கடுங் காயங்களுக்குட்பட்டு கண்டி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
- ❖ இதில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
- ❖ இன்று நடந்த தேயிலை ஏல விற்பனையில் நுவரேலியா மாவட்டத் தேயிலைக்கு அதிக விலை கிடைத்துள்ளது.

15) **சந்தைக்கு அப்பாவுடன் சென்றேன்**

ஞாயிற்றுக்கிழமை காலை பொருட்கள் வாங்குவதற்காக அப்பா சந்தைக்குச் சென்றார். அவருடன் நானும் சந்தைக்குச் சென்றேன். சந்தைக்குள் பெருமளவு மக்கள் நின்றமையால் உள்ளே செல்வது சிரமமாக இருந்தது. பழக்கடையில் பல்வேறு விதமான பழங்கள் குவிந்து கிடந்தன. மரக்கறிச் சந்தைக்குள் எல்லாக் காய்கறிகளும் இருந்தன. அப்பா உருளைக் கிழங்கை வாங்கினார். பின் கத்தரிக்காய் ,வெண்டிக்காய், பயிற்றங்காய் என்பவற்றை வாங்கினார். அதன் பின் வல்லாரையும் பொன்னாங்காணியும் வாங்கினார். அதன் பின் மாம்பழங்களும் கொய்யாப்பழங்களும் வாங்கினார். பின் மீன் சந்தைக்குச் சென்று மீன் வாங்கினோம். அதன் பின் அப்பா இனிப்பு வாங்கித் தந்தார். நான் பழங்கள் வாங்கிய கூடையைச் சுமந்து கொண்டு அப்பாவுடன் வீட்டுக்கு வந்தேன்.

**16)மாலா 22 ஆம் திகதி திங்கட்கிழமை தனது தினக் குறிப்புப் புத்தகத்தில் எழுதியவை. இன்று எனக்குச் சோம்பலாக இருந்தமையால் அரை மணி நேரம்**

**பிந்தி 7 மணிக்கு நித்திரை விட்டெழுந்தேன். தொடர்ந்து ஆறு வசனங்கள் எழுதுக.**

- ❖ பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. அம்மா எனது உடலைத் தொட்டுப் பார்த்து விட்டு ‘‘காய்ச்சல்’’ என்றார்.
- ❖ எட்டு மணிக்கு அப்பா வைத்தியரிடம் அழைத்துச் சென்றார்.
- ❖ வைத்தியர் தந்த மருந்தை 10 மணிக்குக் குடித்தேன்.
- ❖ 11 மணிக்கு வயிற்றைப் புரட்டியது வாந்தி எடுத்தேன்.
- ❖ 12 மணிக்கு அம்மா மல்லி அவித்துத் தந்தார். என்னால் அதைக் குடிக்க முடியவில்லை.
- ❖ நான்கு மணிக்கு எனது பாடசாலைத் தோழிகள்மூவர் என்னைப் பார்க்க வந்தனர்.
- ❖ ஐந்து மணி வரை அவர்கள் என்னுடன் இருந்து கதைத்தனர்.

**17) நாகபுரம் என்னும் அடர்ந்த காட்டில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அதற்கு அருகில் உள்ள கிராமத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால் காட்டில் இருந்து புறப்பட்டது. தொடர்ந்து கதையை எழுதிப் பூர்த்தி செய்க.**

காட்டில் வாழ்ந்த நரிக்கு கிராமத்தைப் பார்க்கப் புதுமையாக இருந்தது. வயல்களின் ஊடாக வந்த நரி வரம்பில் ஒரு நண்டு இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டது. அதைக் காட்டில் காணமையால் அதன் அருகில் வந்தது. நண்டை தனது முன்னங்காலால் அமத்தியது. திடீரென்று நடந்த சம்பவத்தால் பயந்த நண்டு நரியின் காலைப் பிடித்தது. நரிக்கு வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதன் காலில் இருந்து இரத்தம் கசிந்தது. அதனால் அது பலமாகக் கத்தியது. நரியின் சத்தத்தைக் கேட்ட கிராமத்து நாய்கள் அங்கே ஓடி வந்தன. நரி பயத்தால் காலை உதறி விட்டு காட்டுப் பக்கமாக ஓடியது. நாய்கள் காட்டின் எல்லை வரை நரியைக் கலைத்துச் சென்றன. இனிமேல் நான் காட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது. நாம் இருக்கும் இடம் தான் எமக்குப் பாதுகாப்பு என்று நினைத்தது நரி.

**18) விமானத்தில் சென்ற போது**

நான் கட்டு நாயக்கா சர்வதேசவிமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூருக்கு விமானத்தில் சென்ற போது பயந்து போனேன். விமானம் மேலே எழும்பும் போது கட்டப்பட்ட இடைப்பட்டியை அவிழ்க்குமாறு சொன்னார்கள். விமானம் உயரத்தில் பறப்பதால் காது அடைப்பது போல இருந்தது. விமானம் குளிரூட்டப்பட்டிருந்தமையால் பயணத்தின் போது இதமாக இருந்தது. தொலைக் காட்சியில் புரூஸ்லீயினது சண்டைப் படம் ஒன்று காண்பிக்கப்பட்டது. விமானத்தில் கடமையாற்றிய சிப்பந்திகள் எல்லோரும் அழகான பெண்களாகவே இருந்தனர். ஒரு பெண் எனக்கு உண்பதற்காக றோல்ஸ் கொண்டு வந்து தந்தாள். பின்பு குளிர்பானம் கொண்டு வந்து தந்தாள். இன்னொரு பெண் எனக்கு கண்டோஸ் ரொபி கொண்டு வந்து தந்தாள். சீற்றில் பொருத்தப்பட்டிருந்த

கஸட் ரேடியோ மூலம் பல மொழிப் பாட்டுக்களைக் கேட்டேன். ஒரு மணி நேரத்தின் பின் உணவு தந்தார்கள். சுவையாக இருந்தது. விமானப் பயணத்தின் ஆரம்பத்தில் பயந்த நான் பின் மகிழ்வுடன் இருந்தேன்.

## 19) முதன் முதலாகப் பாடசாலைக்குச் சென்ற போது

நான் முதன் முதலாகப் பாடசாலைக்குச் சென்ற போது பயப்பட்டேன். எனது வகுப்பாசிரியா் அன்று வந்த மாணவா்களுக்கு இனிப்புக் கொடுத்தாா். அதை வாங்கவே எனக்குப் பயமாக இருந்தது. நீங்கள் எல்லோரும் நல்ல மாணவா்கள். என்று கூறி எல்லோரிடமும் பெயா்களைக் கேட்டாா். என்னிடம் கேட்ட போது நான் எழுந்து நின்று திருமாறன் என்று கூறினேன். அப்பாவுடைய பெயரையும் அம்மாவுடைய பெயரையும் கேட்டாா். அப்பாவின் பெயா் சுந்தரலிங்கம், அம்மாவுடைய பெயா் சாரதாதேவி என்று சொன்னேன். கெட்டிக்காரன் இரும் என்று சொன்னாா். எனது வகுப்பில் பல மாணவா்களும் மாணவிகளும் இருந்தனா். எனது வீட்டிற்கு அருகில் இருக்கும் மாலதியைத் தவிர எனக்கு யாரையும் தெரியாது. புதிய மாணவா்களுடன் பேசுவதற்குப் பயமாக இருந்தது. இடைவேளையின் போது பல மாணவா்கள் என்னுடன் வந்து விளையாடினாா்கள். எனக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது.

## 20) சுற்றாடல் பாடத்தின் போது ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வழி முறைகள் பற்றி கமலா பேசினாள். “காடுகளை அழிப்பதைத் தடை செய்தல் வேண்டும்”. தொடா்ந்து ஆறு வசனங்கள் எழுதுக

- ❖ நாம் வீடுகளில் மரங்களை நட்டுப் பராமரித்தல் வேண்டும்.
- ❖ தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகள் நீா் நிலைகளில் சோ்வதைத் தடை செய்தல் வேண்டும்.
- ❖ தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகைகளையும் அதன் கழிவுகளையும் உரிய முறையில் அகற்ற வேண்டும்.
- ❖ பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையைத் தடை செய்தல் வேண்டும்
- ❖ வீடுகளில் உள்ள குப்பைகளை உரிய இடத்தில் போட வேண்டும்
- ❖ வீட்டில் உள்ள கழிவு வாய்க்கால்களை அடிக்கடி சுத்தம் செய்தல் வேண்டும்.
- ❖ வீதிகளில் வீட்டுக் கழிவுகளைப் போடுதல் கூடாது.
- ❖ நீா் தேங்கி நிற்கக் கூடிய பொருட்களை அகற்ற வேண்டும்.

## 21) எனது நண்பனைச் சந்தித்து....

என்னுடன் படித்த எனது நண்பனான திருமாறனைச் சந்தித்துக் கதைத்தேன். அவன் எமது பாடசாலையை விட்டு விலகி இன்னொரு

பாடசாலையில் கல்வி கற்கிறான். தந்தையார் தொழில் நிமிர்த்தம் இடம்மாறியதால் அவன் பாடசாலையை விட்டுச் செல்ல வேண்டிய நிலை உருவானது. புதிய பாடசாலையில் கற்கும் மாணவர்களுடன் தான் இன்னும் நன்றாகப் பழகவில்லை. என்று சொன்னான். புதிய பாடசாலை நான் முன்பு கற்ற பாடசாலையைப் போல் இல்லை என்றான். அப்படிச் சொல்லக்கூடாது காலப் போக்கில் பழகினால் நல்லதாகி விடும் என்றேன்.பல மணி நேரம் எமது பாடசாலையைப் பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும் கதைத்தோம். ஆசிரியர்களை தான் விசாரித்த தாகச் சொல்லச் சொன்னான். இருவரும் துயரத்துடன் பிரிந்தோம்.

## 22) நூலகத்தில் நான்

பிரதேச சபையால் அமைக்கப்பட்ட நூலகத்தில் நான் இருந்து சிறுவர் நூல் ஒன்றை வாசித்தேன். எனக்கருகில் பலர் இருந்து பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருந்தனர். நூலகத்திற்கு நான் செல்லும் போது எனது நண்பனான மாறனையும் அழைத்துச் செல்வேன். சிறுவர்களுக்கான நூல்களையும் பத்திரிகைகளையும் நூலகத்தில் நான் வாசிப்பேன். நூலகர் மிகவும் நல்லவர். அவர் நான் கேட்கும் நூல்களை வீட்டில் கொண்டு சென்று வாசிக்கத் தருவார். நூலகத்தில் நான் இருக்கும் வேளைகளில் நூலகம் மிகவும் அமைதியாக இருக்கும். நூலகச் சுவரில் அந்த நூலகத்திற்குரிய விதிமுறைகளை எழுதியிருந்தனர். நூலகம் சிறுவர்களான எமக்கு பெரும் உதவி செய்கிறது.

## 23) எனது மாமா வீட்டுக்கு வந்து

நான் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையால் எனது மாமா வீட்டிற்கு வந்து பரிசு ஒன்றைத் தந்தார். பரிசாகத் தந்த பெட்டியைத் திறந்து பார்த்தேன். அதற்குள் ஒரு சேட்டும் ஒரு காற் சட்டையும் ஒரு பேனாவும் இருந்தது. அது மிகவும் அழகான சேட். எனக்கு அதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. இனி மேல் தான் கவனமாகப் படித்தல் வேண்டும் என்றார் மாமா. மாமாவுக்கு சிற்றுண்டி வகைகளை அம்மா கொடுத்தார். மாமா தான் அவற்றை உண்ணு முன் இனிப்பு ஒன்றை எடுத்து எனது வாய்க்குள் வைத்தார். நான் மாமாவின் மீது அளவில்லாத அன்பு வைத்திருக்கிறேன்.

## 24) எமது வகுப்பறையில் சிறுவர் நூல் நிலையத்தை ஆரம்பித்து

எமது வகுப்பாசிரியரின் விருப்பத்திற்கிணங்க எமது வகுப்பு மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு புத்தகம் கொண்டு வந்து வகுப்பறையில் நூலகத்தை ஆரம்பித்து வைத்தோம். வாசிப்பு மூலையில் நூலகம் அமைப்பதற்கு அதிபர் ஒரு இரும்பு அலுமாரியைத் தந்தார். பழைய மாணவரான வைத்தியரொருவர் நூல் நிலையத்தை திறந்து வைத்தார். அவர் இருநூறு சிறுவர் நூல்களை அன்பளிப்புச் செய்தார். மாணவர் தலைவனான செல்வேந்திரனிடம் நூலகப்

பொறுப்பை எமது வகுப்பாசிரியர் கொடுத்தார். ஓய்வான நேரங்களிலும் ஆசிரியர் வராத வேளைகளிலும் நாம் நூல்களைப் பெற்று வாசிப்போம். மாணவர்கள் வீட்டிற்கும் நூல்களை எடுத்துச் சென்று வாசிக்கலாம். மற்றய வகுப்பு மாணவர்களும் எம்மைப் பார்த்து நூலகம் ஒன்றை ஆரம்பித்தனர். நாங்கள் எமது நூல் நிலையப் புத்தகங்களை மற்றய வகுப்பு மாணவர்களுக்கும் கொடுப்போம். இப்பொழுது எம்மிடம் முந்நூறு சிறுவர் நூல்கள் உள்ளன.

**25) கடற்கரையில் எனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு குட்டி நாய் என்னருகில் வந்தது.அக்குட்டி நாய் என்னைப் பார்த்து வாலாட்டியது. தொடர்ந்து எழுதி இச்சம்பவத்தை நிறைவு செய்க.**

வாலை ஆட்டிக் கொண்டிருக்கும் குட்டி நாயை நான் ஆசையோடு பார்த்தேன். வெள்ளையும் கறுப்பு நிறமும் கொண்ட அந்த நாய்க் குட்டி அழகாக இருந்தது. மெதுவாகப் பிடித்தேன். அது என்னுடன் சேர்ந்து விட்டது. கடற்கரையில் இருந்த கடையில் இரண்டு பிஸ்கற் வாங்கி அதற்குக் கொடுத்தேன். அது மகிழ்வுடன் பிஸ்கற்றை உண்டது. நானும் நண்பர்களும் கடற்கரையில் ஓடினோம். அது எங்களைத் துரத்திக் கொண்டு வந்தது. அதைத் தூக்கி வீட்டுக்குக் கொண்டு செல்ல நினைத்தேன். அப்பொழுது அங்கு வந்த சிறுவன் ஒருவன் ‘‘ஜிம்மி நீ இங்கேயா நிற்கிறாய்? நான் கடற்கரை முழுவதும் தேடினேன். என்றவாறு நாய்க் குட்டியைத் தூக்கிச் சென்றான். எனக்குக் கவலையாக இருந்தது.

**26) முதியோரை மதிப்போம்**

முதியவர்களை நாம் எப்போதும் மதித்தல் வேண்டும். அவர்கள் இளமைக் காலத்தில் குடும்பத்திற்காகவும் நாட்டுக்காகவும் உழைத்தவர்கள். முதியவர்களின் வாக்கு அனுபவத்தால் வந்தது. அவர்களது புத்திமதிகளைக் கேட்டு நடப்பதன் மூலம் நாம் நன்மை பெறலாம். முதியவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதுடன் அவர்களைப் பாதுகாப்பதும் எமது கடமையாகும். நாம் முதியோர்களைப் பாதுகாத்தால் தான் எம்மைப் பார்த்து எமது பிள்ளைகளும் நாம் முதியோரானதும் எம்மை மதிப்பார்கள். உலகில் உள்ள எல்லோரும் ஒரு நாள் முதியவராவோம். என்பதை நினைத்துப் பார்த்துச் சிறியவர்கள் முதியவர்களை மதித்தல் வேண்டும். முதியவர்கள் நாட்டின் சொத்து என்று சொல்வார்கள். முதியவர்கள் அறிவும் அனுபவமும் மிக்கவர்களாக இருப்பதால் அவர்களிடம் நாம் நிறையக் கற்கலாம்.

**27) பூங்காவிற்குச் சர்மிலாவும் சௌமியாவும் நிசாந்தனும் சென்றனர். நிசாந்தன் ரோஜாப் பூக்கள் உள்ள பகுதிக்குச் சென்றான். ‘‘சர்மி இங்கே வந்து பார் ...’’ தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

- ❖ சர்மிலா ரோஜாச் செடிகள் உள்ள பகுதிக்குச் சென்றாள். கண்ணைப் பறிக்கும் பல வர்ண ரோஜாப் பூக்கள் அவளைப் பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது.
- ❖ எவ்வளவு அழகான பூக்கள் இவ்வளவு நிறங்களை நான் இது வரை காணவில்லை. என்றான் நிசாந்தன்.
- ❖ மலர்களின் அரசி ரோஜா என்பது எவ்வளவு உண்மை என்றாள் சௌமியா
- ❖ இந்தப் பூங்காவில் உள்ள பூக்கள் யாவும் மிகவும் அழகானவையாக உள்ளன.
- ❖ இவற்றில் எதை அழகென்று சொல்வது.அனேகமான பூ இனங்கள் இங்கே உள்ளன. அழகான குரோட்டன்கள் உள்ளன. அழகான செயற்கை நீரூற்றுக்கள் உள்ளன. வண்ண வண்ண மின் குமிழ்கள் கண்களைப் பறிக்கின்றன. அழகான மீன்கள் , அழகான பறவைகள் இவற்றையெல்லாம் ஒரே இடத்தில் பார்க்க முடிந்தது மகிழ்ச்சியை தருகிறது என்றான் நிசாந்தன்.

## 28) நான் விஞ்ஞானிகளின் படம் சேகரிக்கிறேன்

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளின் படங்களைச் சேகரிப்பதே எனது பொழுது போக்கு விஞ்ஞானிகளின் படங்களை ஒரு வெளிக்களக் கொப்பியில் ஒட்டியுள்ளேன். அவர்களின் படங்களுக்குக் கீழ் அவர்களின் கண்டு பிடிப்புக்களைப் பற்றி எழுதி வைத்துள்ளேன். என்னிடம் நூற்றுக்கு மேற்பட்ட விஞ்ஞானிகளின் படங்கள் உண்டு. எனக்குப் பிடித்த விஞ்ஞானி தொலை பேசியைக் கண்டு பிடித்த கிரகம்பெல் என்பவரே அவர் தொலை பேசியைக் கண்டு பிடித்தமையால் இன்று உலகம் சுருங்கியுள்ளது. தோமஸஅல்வாஎடிசன் மின்சாரத்தைக் கண்டு பிடித்தமையால் நாம் ஒளிமயமான உலகில் வாழ முடிகிறது. ரைட் சகோதரர்கள் விமானத்தைக் கண்டு பிடித்ததால் உலகை நாம் வலம் வருகிறோம். விஞ்ஞானிகள் கண்டு பிடித்த சாதனங்களையும் தற்போது அவை வளர்ச்சியடைந்த விதத்தையும் கொண்ட படங்கள் பல என்னிடம் உண்டு.

## 29) நான் அறிந்த விசித்திரமான பிராணி நீர் நாய் (OTTER)

நீர் நாய், நீர் நிலைகளின் கரையோரங்களில் வாழும் ஒரு சிறிய பிராணி. இதன் உருவம் எலியைப் போன்றது. இது கடலின் அடியில் உள்ள சேற்றிலும் வதிவிடம் அமைத்து வாழும். அதன் உடலில் மென்மையான மயிர்கள் இருக்கும். இதன் முன்னங்கால்கள் இரண்டும் சிறியவை. பின்னங்கால்கள் இரண்டும் பெரியவை. விரல்களைச் சவ்வு இணைத்துள்ளமையால் இது விரைவாக நீந்திச் செல்லும். இது குட்டி ஈன்று பால் கொடுக்கும். இது நீரில் வாழும் உயிரினங்களைப் பிடித்துத் தின்னும். மரப்பட்டைகளையும் உண்ணும் அணிலைப் போல இது இருந்து முன்னங்கால்களால் இரையை எடுத்துக் கொறித்து உண்ணும். இதன் மென்மையான மயிரில் செய்யப்படும்.

தொப்பிகளுக்கு உலக நாடுகளில் பெரும் மதிப்பு உண்டு. ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆசியாவின் சில பகுதிகளிலும் இந் நீர் நாய் கூட்டம் கூட்டமாக வாழ்கிறது.

### 30) நான் செய்த புகையிரதப் பயணம்

சென்ற சனிக்கிழமை நானும் அப்பாவும் கொழும்பில் இருந்து வவுனியாவுக்குப் புகையிரதத்தில் பயணம் செய்தோம். புகையிரதப் பெட்டியில் உள்ள ஆசனத்தில் பலர் அமர்ந்திருந்தனர். பலர் பெட்டியில் நின்று பிரயாணம் செய்தனர். புகையிரதம் ஒவ்வொரு புகையிரத நிலையத்திலும் நின்ற போது பலர் ஏறினர். பலர் இறங்கினர். வியாபாரிகள் பலர் தமது வியாபாரப் பொருட்களுடன் ஏறினர். இளநீர், சோடா போன்ற பானங்களும் வடை, முறுக்கு, பணிஸ் போன்ற சிற்றுண்டிவகைகளையும் வியாபாரிகள் விற்றனர். அப்பாவும் நானும் இளநீர் வாங்கிக் குடித்தோம். அப்பா தோடம்பழங்களை வாங்கினார். ஒன்றை உரித்து எனக்குத் தந்தார். மிகவும் சுவையாக இருந்தது. புகையிரதத்தில் இருந்த மின்விசிறிகளைக் காணவில்லை. மின்விளக்குகள் உடைந்திருந்தன. நாம் இருந்த ஆசனம் கிழிந்திருந்தது. இவற்றை யாரோ சேதப்படுத்தி விட்டார்கள். பொறுப்பில்லாதவர்கள் என்று அப்பா சொன்னார். பகல் பன்னிரண்டு மணிக்கு வவுனியாவை வந்தடைந்தோம். புகையிரதப் பயணம் மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

### 31) தரம் ஐந்து வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் கையெழுத்துப் பிரதி ஒன்றைத் தயாரிக்க விரும்பினார். வகுப்பாசிரியர் மாணவர்களது ஆக்கங்களைப் பரிசீலனை செய்து தரமானவற்றைத் தெரிவு செய்து கொடுத்தார். அருணனும், சிவாவும், மாலதியும் அவற்றை ஒழுங்கு படுத்தினர். தொடர்ந்து எழுதுக.

முதலாவதாக அதிபரின் ஆசியுரையை எடுத்தனர். அதன் பின் வகுப்பாசிரியரின் வாழ்த்துரையை எடுத்தனர். கடவுளை வாழ்த்திக் கவிதை ஒன்றை திருமாறன் எழுதியிருந்தான். அதை மூன்றாவதாக வைத்தனர். பாடசாலையைப் பற்றி அமுதன் எழுதியதை நான்காவதாக வைத்தனர். அதன் பின் தமிழ்ப் பாடம் பற்றிய கட்டுரைகளையும் கவிதைகளையும் தெரிவு செய்து வைத்தனர். அதன் பின் சுற்றாடல் பாடம் தொடர்புடைய ஆக்கங்களைத் தெரிவு செய்தனர். அதன் பின் அழகியல் பாடம் சம்பந்தமான ஆக்கங்களைத் தெரிவு செய்தனர். பின் மட்டையைக் கட்டினர். அமுதா அட்டையில் அழகானதொரு படம் வரைந்தாள் சித்திர ஆசிரியரின் உதவியுடன் கையெழுத்துப் பிரதியின் தேவையான ஆக்கங்களுக்குப் படம் வரைந்தனர். கையெழுத்து சஞ்சிகை மிகவும் அழகாக இருந்தது. அதிபருக்குக் காட்டி விட்டு தமது வகுப்பில் உள்ள வாசிப்பு மூலையில் வைத்தனர்.

## 32) அன்று திங்கட்கிழமை அன்றைய வீரகேசரிப் பத்திரிகையில் சனிக்கிழமை இரவு வீசிய பலத்த புயற் காற்றின் அனர்த்தம் பற்றிய செய்தியைக் காந்தன் வாசித்தான். "சனிக்கிழமை இரவு பதினொரு மணிக்கு பலத்த புயற் காற்று மட்டக்களப்புப் பகுதியில் வீசியது."...தொடர்ந்து ஏழு வசனங்கள் எழுதுக

மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். புயற் காற்றினால் மரங்கள் பல விழுந்தன. அச் சத்தம் கேட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். வீதியின் இரு மருங்கிலும் நின்ற மரங்கள் முறிந்தும் வேரோடும் பாறியும் விழுந்தன.

இதனால் மின்சாரம் தடைப்பட்டது. போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. சுமார் ஒரு மணி நேரம் வீசிய காற்றால் ஆயிரத்திற்கும் அதிகமான தென்னை மரங்கள் விழுந்துள்ளன. மக்களுக்கேற்பட்ட சேத விபரம் பற்றி இச் செய்தி எழுதும் வரை அறிந்து கொள்ள முடியவில்லை. மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் பத்துப்பேர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்திச் சபையினர் மரங்களை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். மின்சார தொலைத் தொடர்பு வசதிகள் சீரடைய இரண்டு வாரங்கள் செல்லு மென சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இப்போது மட்டக்களப்பு மாவட்டம் அமைதியாக இருந்த போதும் புயல் அபாயம் முற்றாக நீங்கவில்லையென வானிலை அவதான நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

## 33) என்றும் சுத்தமான நீரையே குடிப்போம் என்ற தலைப்பில் மாணவர் மன்றத்தில் உசா பேசினாள். "உலகில் உள்ள மக்களில் பலர் அசுத்தமான நீரையே குடிக்கிறார்கள்"... தொடர்ந்து எழுதிப் பேச்சை முடிவு செய்க.

கிணறு, குளம், ஆறு, ஓடை என்பவற்றிலிருந்தே மக்கள் குடிநீரைப் பெறுகிறார்கள். இங்கு பெறும் நீர் பெரும்பாலும் அசுத்தமடைந்தே இருக்கின்றது. அதனால் மேற்படி இடங்களில் இருந்து பெறும் நீரைக் கொதிக்க வைத்து ஆறிய பின் குடித்தல் வேண்டும். அசுத்தமான நீரினால் வயிற்றுளைவு ,வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல், போன்ற கொடிய நோய்கள் உண்டாகின்றன. சுத்தமான நீர் நோயை நீக்குவதோடு ஆரோக்கியத்தையும் தரும். குளோரின் ஒரு கிருமி நாசினி. குடி நீரில் கிருமிகள் இருந்தால் அவற்றைக் குளோரின் அழித்து விடும். அதனால் தான் குடி நீரில் குளோரினைக் கலக்கிறார்கள். எனவே குடிக்கும் நீரைக் கொதிக்கவைத்து அல்லது குளோரின் இட்டுக் குடிப்போம். சுத்தமான நீர் சுகவாழ்வைத் தரும் என்பதை மறவாதீர்கள்.

## 34) மிருகக்காட்சிச் சாலை

நான் மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்றேன். தெகிவளையில் மிருகக் காட்சிச் சாலை இருக்கிறது. அங்கு பல நிறங்களை உடைய கிளிகளைக் கண்டேன். பஞ்சவா்ணக் கிளியை இங்கு தான் நான் பார்த்தேன். ஏராளமான யானைகள் நின்றன. சிங்கம், புலி கரடி , மான், மரை,ஒட்டகச்சிவிங்கி, ஒட்டகம் போன்ற மிருகங்களை அங்கு தான் நான் முதன் முதலாகக் கண்டேன். அங்குள்ள குளத்தில் ஏராளமான முதலைகள் நீந்தி விளையாடின. கண்ணாடித் தொட்டிகள் பலவற்றில் வா்ணிக்க முடியாத நிறங்களில் மீன்கள் நீந்தி விளையாடின. அதன் உருவ அமைப்பு மிகவும் அழகாக இருந்தது. அவற்றை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். மாலை ஐந்து மணிக்கு யானைகள் நடனமாடின. அவை நாற்காலிகளில் அமா்ந்தன. வட்டமாக வலைப் பிடித்துக் கொண்டு நடந்தன. மிகவும் அழகாக அவை ஆடும் விதத்தை மக்கள் ரசித்து மகிழ்ந்தனா்.

## 35) பழங்கள்

உலகில் ஏராளமான பழங்கள் உள்ளன. சுவை மிகுந்ததோடு மனிதனின் ஆரோக்கியத்திற்கும் உகந்தவை. மிகவும் எளிதாகவும் மலிவாகவும் கிடைக்கும் பழம் வாழைப்பழமாகும். வாழைப்பழத்தை ஏழைகளின் அப்பிள் என்று அழைப்பா். வாழைப்பழத்தில் உயிா் சத்துக்களும் தாதுப் பொருட்களும் உண்டு. பப்பாசிப்பழம் மலிவானதும் உற்பத்தி செய்ய இலகுவானதுமாகும். பப்பாசிப்பழத்தில் உயிா்சத்து ஏ,பீ,சி என்பன உண்டு. பப்பாசிப்பழமும் வாழைப்பழமும் உணவைச் சமிபாடடையச் செய்யும். இவ்விரண்டு பழங்களையும் நோயாளிகளும் உண்ணலாம். மாம்பழம் மிகவும் சுவையான பழமாகும். மாம்பழத்தில் கறுத்தக்கொழும்பான்,அம்பலவி,விலாட்டு, செம்பாட்டான் எனப் பல இனங்கள் உண்டு. கொய்யாப்பழம் உயிா்ச்சத்து சீ அதிகமாகக் கொண்ட சுவையான பழமாகும். பலாப்பழம் மிகவும் சுவையான பழமாகும். தோடம்பழம் ,அன்னாசிப்பழம், விளாம்பழம் போன்ற பழங்கள் சத்து மிக்கவை. பொதுவாகப் பழங்கள் யாவும் எமது உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

## 36) வாகனத்தில் செல்லும் போது பெருமழையில் அகப்பட்ட நான்

பெற்றோருடன் மலைநாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சென்று கொண்டிருந்த வேளையில் பெருமழையில் அகப்பட்ட நான் மிகவும் பயந்து போனேன். மழை பயங்கரமாகக் கொட்டியது. வானமெங்கும் வெள்ளிக் கோடுகள் பளீச்சிட்டன. அதைப் பார்க்க எனக்குப் பயமாக இருந்தது. உயரமான இடங்களில் தான் மின்னல் தாக்குமெனப் படித்திருந்த படியால் எனக்குப் பயமாக இருந்தது. அப்பாவைக் கட்டிப்பிடித்தேன்.எனது உடல் நடுங்குவதைக் கண்ட அப்பா ‘‘பயப்படாதே’’ என எனது முதகில் தட்டினாா்.பலத்த மழை பெய்ததால் நான் சென்ற வாகனம் மெதுவாகச் சென்றது. வானின் கண்ணாடிக் குள்ளால் தெரியும் மின்னல் வெளிச்சத்தைப் பார்க்கப் பயமாக இருந்தது. அதைவிட இடி இடிக்கும் சத்தம் எனது காதை அடைக்கச் செய்தது.

பயத்துடனும் ,பீதியுடனும் மெதுவாகச் சென்று நண்பர் ஒருவரின் வீட்டை அடைந்தேன்.அதை நினைத்தால் இப்பொழுதும் பயமாக இருக்கிறது.

## 37) தாவரங்கள் இல்லாத பூமியைப் பற்றி உமது கருத்து

தாவரங்கள் இல்லாத பூமியில் எந்த உயிரினங்களும் இருக்கமாட்டாதென்று நான் கருதுகிறேன். விஞ்ஞான ஆய்வுகளின் படி தாவரங்களில் தான் எல்லா உயிரினங்களும் தங்கியுள்ளன. அதனால் தாவரங்கள் இல்லாத பூமியில் உயிரினங்கள் வாழ வாய்ப்பே இருக்காது.தாவரங்கள் காபனீரொட்சைட்டை உள்ளே எடுத்து ஒட்சிசனை வெளியிடுவதால் தாவரங்கள் இல்லாத பூமியில் காற்று இருக்கமாட்டாதென நான் நினைக்கிறேன். அத்துடன் தாவரங்களின் ஆவியுயிர்ப்பினால் தான் மழை பெய்கின்றது. தாவரங்கள் இல்லாவிட்டால் மழையும் பெய்யமாட்டாது. தாவரங்கள் இல்லாத பூமியில் உயிரினங்கள் எவையும் வாழமாட்டாது.காற்று இருக்கமாட்டாது.மழை பெய்யமாட்டாது.சந்திர மண்டலம் போல் தான் தாவரங்கள் இல்லாத பூமி இருக்குமென நான் நினைக்கின்றேன்.

## 38) சனநெருக்கம் மிகுந்த கூட்டத்தில் தவறிய நான்

சனநெருக்கம் மிகுந்தகூட்டத்தில் தவறிய நான் பயத்தால் அழுதேன். சனக்கூட்டம் என்னை நெருக்கித் தள்ளியது.மூச்சு விடக் கஸ்டமாக இருந்தது.அப்பா வீட்டில் இருந்து புறப்படும்போது ‘‘கவனமாக பராக்குப் பாராமல் எனக்குப் பின்னால் வரவேண்டும்.தேர் திருவிழாவுக்கு அதிகமான மக்கள் வருவார்கள்’’என்று கூறியவார்த்தைகள் எனது நினைவுக்கு வந்தன. எனது பெற்றோரைக் காணாமையால் பயத்துடன் விம்மி விம்மி அழுதேன். நான் அழுவதைக் கண்ட பெரியவர் ஒருவர் என்னைத் தூக்கினார். உயரமாக இருந்தமையால் சுவாசிக்கக் கூடியதாக இருந்தது.அவர் எனது பெயரைக் கேட்டார்.துக்க மேலீட்டால் எனது பெயரை அவருக்குச் சொல்ல முடியவில்லை. அதனால் அவர் என்னைக் காவற்துறை அலுவலகத்தில் கொண்டு சென்று விட்டார். காவல் துறையினர் எனது நிறம் ,நான் அணிந்திருக்கும் உடையின் விபரங்கள் பற்றிய தகவல்களை ஒலிபெருக்கியில் கூறினார்கள்.அதைக் கேட்ட எனது பெற்றோர் காவல்துறை அலுவலகத்திற்கு வந்து என்னைக் கூட்டிச் சென்றனர்.

## 39) பௌர்ணமி இரவில் கடற்கரையில் இருந்தேன்.

சித்திரை மாதப்பௌர்ணமி தினத்தன்று நான் கடற்கரையில் இருந்தேன். கடற்கரையெங்கும் பலர் கூடி இருந்தனர். பகலைப் போல் இருந்த கடற்கரைப் பிரதேசம் முழுவதும் மிகவும் குளிர்மையாக இருந்தது. கடல் அலைகள் பொங்கி வந்து கரையில் அடித்து நுரைத்தன. எனது தம்பியும் நண்பர்களும் கடல்

அலைகளை கைகளால் அள்ளி விளையாடினார்கள். சிறுவர்கள் மகிழ்வுடன் கடற்கரையில் ஓடி விளையாடினார்கள்.சிலர் சிப்பி ,சோகிகளைப் பொறுக்கினார்கள். பூரணசந்திரன் வானில் தங்கத்தாம்பாளம் போல் பிரகாசமாக இருந்தது. கடற்கரையில் இருந்தவாறு அழகான காட்சிகளைப் பார்த்தபோது அண்மையில் பத்திரிகையில் நான் படித்துச் சுவைத்த கவிதை ஒன்று நினைவில் வந்தது. “தங்கத்தட்டுப்போலவும் ,தங்கை முகத்தைப் போலவும் வானில் நிலவு மிதக்குது.முகில்கள் அதனைத் தழுவுது”. அந்த வரிகளில் உள்ள அர்த்தத்தை நேரில் நான் புரிந்து கொண்டேன்.

## 40) சமாதானம் வந்த பின்பு நான்

சமாதானம் வந்த பின்பு நான் இதுவரை போகக்கட்டுப்பாடு விதித்திருந்த பல இடங்களுக்குச் செல்லத் தீர்மானித்திருக்கிறேன். தரை வழிப்பாதையூடாக கொழும்புக்குச் சென்று ,தெகிவளையில் உள்ள மிருகக் காட்சிச் சாலையைப் பார்ப்பேன். எனது நண்பன் ஒருவன் முன்பு மிருகக் காட்சிச்சாலைக்குச் சென்று அங்கு பார்த்தவற்றைக் கூறிய பின் எனக்கும் அதைப் பார்க்கும் ஆசை ஏற்பட்டது. விதம் விதமான மிருகங்களையும் , பறவைகளையும் ,வண்ணவண்ண மீன்களையும் பார்த்து இரசிப்பேன். சமாதானம் வந்தபின்பு நான் இலங்கை முழுவதையும் சுற்றிப் பார்ப்பேன். முன்பு தடுப்பு முகாம்களும் ,கைது செய்தலும், குண்டு வெடிப்புகளும் நிகழும். சமாதானம் வந்த பின்பு இவையெல்லாம் நிகழாது. அதனால் நான் எங்கும் செல்வேன். கதிர்காம ஆலயத்திற்குச் சென்று முருகனைத் தரிசிப்பேன். மாணிக்ககங்கையில் நீந்தி விளையாடுவேன். மலையில் ஏறி அங்கிருக்கும் முருகனைத் தரிசிப்பேன். சூரன் மலைக்குச் சென்று வணங்குவேன். சமாதானம் வந்த பின்பு நான் மேற்கூறியவற்றையெல்லாம் செய்வேன்.

## 41) தபாற் சேவகனாக நான்

தபாற் சேவகனாக நான் கடமையாற்றுவதால் நேர்மையாகவும் கண்ணியமாகவும் நடந்து கொள்வேன். தொழில்களில் மிகச் சிறந்த தொழிலை நான் பார்ப்பதால் பற்றுடன் செயலாற்றுவேன்.கடிதங்களைகாலதாமதமின்றி உரியவர்களிடம் கொடுப்பேன். தபாற் சேவகனான நான் எழுதத் தெரியாதவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுப்பேன். வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாசித்துக் காட்டுவேன். தபாற் சேவகனான நான் கடமையாற்றுவதால் என்னைப் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். வெளிநாட்டுக் கடிதங்கள் ,உள்நாட்டுக் கடிதங்கள்,பணம் முதலியவை என்மூலமாகவே மக்களுக்குச் சென்றடைகின்றன என்பதை நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. தபாற்சேவகனாக நான் கடமையாற்றுவதால் அமங்கல நிகழ்ச்சிகளை மக்களுக்கு தெரிவிக்கும் சந்தர்ப்பங்களில் துக்கப்படுவேன்.

## 42) பாடசாலைத் தமிழ் மன்றக் கூட்டத்தில் நான் பேசிய போது

எமது பாடசாலைத் தமிழ் மன்றக் கூட்டத்தில் நான் பேசியபோது மாணவர்கள் எல்லோரும் அமைதியாக இருந்து கேட்டுக் கொண்டிருந்தனர். ஆசிரியர்களும், அதிபரும், மாணவர்களுக்குப் பின்னால் அமர்ந்திருந்து எனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர். என்னுடன் படிக்கும் மாணவன் ஒருவன் நான் பேசும்போது மாலை ஒன்று கொண்டு வந்து எனக்குப் போட்டான். அப்பொழுது மாணவர்கள் கைதட்டி ஆரவாரித்தனர். நான் நன்கு ஆயத்தம் செய்து பேசியமையால் மாணவர்கள் உற்சாகமாக இருந்து எனது பேச்சைக் கேட்டனர்.ஆசிரியர்களும் கவனமாக எனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர். நான் பேசும் போது எனது வகுப்பாசிரியர் புன்னகைத்தார். மகிழ்வுடன் தனக்கு அருகில் இருந்த ஆசிரியர்களுக்கு எதையோ சொல்லிவிட்டு கைதட்டினார். ஆசிரியர்களும் கைதட்டினார்கள். மாணவர்களும் கைதட்டி என்னை உற்சாகப்படுத்தினர். நான் பேசும் போது நடந்தவற்றை நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மாணவன் ஒருவன் நான் பேசும் போது குறுக்கிட்டு கேள்வி கேட்டான். நான் அதற்குத் தகுந்த மறுமொழி சொன்னேன்.

## 43) வைத்தியராக ஊரில் உள்ள வைத்திய சாலையொன்றில் நான்

வைத்தியராக ஊரில் உள்ள வைத்தியசாலையொன்றில் நான் கடமையாற்றுகிறேன். என்னிடம் மருந்து பெற வரும் அநேகர் எனது இனத்தவர்கள். பலர் எனக்குத் தெரிந்தவர்கள். சிலர் எனது நண்பர்கள். இதனால் அவர்கள் தமக்குள்ள நோயைப் பற்றி பயமில்லாமல் என்னிடம் கூறுவார்கள். நானும் பற்றுடன் நோயைப் பற்றி வினாவி மருந்து எழுதிக் கொடுப்பேன். ஊரில் உள்ள வைத்தியசாலையொன்றில் வைத்தியராக நான் கடமையாற்றுவதால் என்னைக் கற்பித்த பல ஆசிரியர்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்பைப் பெற்றுள்ளேன். நான் அக்கறையுடன் கவனிப்பதால் ஊரில் உள்ள அனைவரும் என்மீது அன்பும், மதிப்பும் வைத்துள்ளனர். வைத்திய அதிகாரியாக ஊரில் உள்ள வைத்தியசாலையில் நான் கடமையாற்ற சந்தர்ப்பமளித்த கடவுளுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

## 44) நான் கற்ற பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கு பிரதமவிருந்தினராகச் சென்றேன்.

நான் கற்ற பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகச் சென்றேன். என்னை அதிபரும் , ஆசிரியர்களும் மகிழ்வுடன் வரவேற்றனர். பின் அதிபர் எனக்கு மாலை அணிவித்தார். நான் மகிழ்ச்சியின் உச்சியில் இருந்தேன். அதிபர் எனக்கு மாலை போடும் போது ஒலிபெருக்கியில் சொன்னார்கள். அப்போது மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அதன் பின் விளையாட்டுப் போட்டி ஆரம்பமானது. மிகவும் விறுவிறுப்பாகப் போட்டிகள்

நடைபெற்றன. இடைவேளையின் போது மாணவர்களின் உடற்பயிற்சிக் கண்காட்சி நடைபெற்றது. பின் விநோத உடைப் போட்டி நடைபெற்றது.மாணவர்கள் விநோதமான உடைகளை அணிந்து மைதானத்திற்கு வந்தனர். அவற்றைப் பார்க்க எனக்குப் படிக்கும் காலத்து நினைவுகள் வந்தன. விளையாட்டுப் போட்டியின் முடிவில் போட்டியில் வென்ற மாணவர்களுக்கு பரிசுகள் கொடுத்தேன்.

## 45) மலை உச்சியில் நான்

மலை உச்சியில் நான் இருந்து கீழே பார்த்தேன். பயமாக இருந்தது. தூரத்தில் தெரியும் பிரதான வீதி வளைந்து செல்லும் கறுப்புக்கோடு போல் தெரிந்தது. அதில் செல்லும் வாகனங்கள் சின்னஞ் சிறிய எறும்புகள் ஊர்ந்து செல்வதைப் போலிருந்தன. பசுமையான மரங்களின் இலைகள் தான் தெரிந்தன. நிலத்திற்குப் பச்சைக்கம்பளம் விரித்து விட்டதைப் போலிருந்தது. கீழே பெரிய பெரிய கற்பாறைகள் இருந்தன. சிறிய கற்பாறைகள் யானைகள் படுத்திருப்பது போல் இருந்தன. சிற்றாறு ஒன்று நெளிந்து நெளிந்து சென்றது. மலை உச்சி மிகவும் குளிராக இருந்தது. காற்று பலமாக வீசியது.நான் சுவற்றர் அணிந்திருந்தபோதும் கடுமையாகக் குளிர்ந்தது. கால்கள் நடுங்கின.மரத்தைப் பிடித்துக் கொண்டு மலையின் உச்சியில் இருந்த நான் எவ்வாறு இறங்கலாமென யோசித்துக் கொண்டிருந்தேன். மலை உச்சியில் விதம் விதமான வண்ணத்துப் பூச்சிகள் பறந்தன. பல இனப் பறவைகளும் பறந்து சென்றன. பயமாக இருந்த போதும் மலை உச்சியில் இருந்து பார்க்கும் போது மனதுக்கு உற்சாகமாக இருந்தது.

## 46) வியாபாரியான நான்

வியாபாரியான நான் பொருட்களை உற்பத்தி செய்வோரிடம் வாங்கி விற்பேன்.அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும் வாங்கி விற்பேன். கமக்காரரிடம் விளை பொருட்களை வாங்கும் பொழுது நிறை குறைத்து வாங்க மாட்டேன். நீதியாகவும் ,நியயாயமாகவும் வியாபாரிகள் வியாபாரம் செய்ய வேண்டும் என்று பெரியவர்கள் கூறி இருக்கிறார்கள். அதனால் நான் நீதியாகவும் ,நியாயமாகவும் வியாபாரம் செய்து வருகிறேன். பொருட்களில் கலப்படம் செய்ய மாட்டேன். வியாபாரியான நான் கலப்படம் செய்தால் மக்களுக்கு நோய்கள் உண்டாகும். அதனால் பழி வரும். அதனால் நேர்மையான வழியிலேயே வியாபாரம் செய்கிறேன்.

## 47) எனது கடற்பிரயாணம்

நான் எனது பெற்றாருடன் கடந்த வருட பாடசாலை விடுமுறையின் போது சிற்றி ஓப் ரிங்கோ என்ற கப்பலில் கங்கேசன் துறை துறைமுகத்தில் ஏறினேன். மாலை நாண்கு மணிக்கு எங்களைச் சிறிய படகுகளில் ஏற்றிக் கொண்டு சென்று கடலில் நின்ற கப்பலில் ஏற்றிவிட்டனர். அக்கப்பல் பெரியதொரு அடுக்குமாடி வீடுபோல் இருந்தது. கீழே உள்ள இரண்டு தட்டுக்களிலும் பிரயாணிகள் நிரம்பியதால் எங்களை மேல்தட்டில் ஏற்றினார்கள். காங்கேசன்துறைத் துறைமுகம் வெகு தூரத்தில் புள்ளியாகத் தெரிந்தது. மிகுதிப் பிரதேசம் முழுவதும் கடலால் சூழப்பட்டிருந்தது. இரவு எட்டு மணிக்குக் கப்பல் புறப்பட்டது. அன்று பூரணை தினமாக இருந்ததால் நிலவின் பட்டொளி பட்டு கடல் நீர் பளபளத்துது. கப்பல் புறப்பட்ட சிறிது நேரத்திற் கெல்லாம் முழுமையான கடலே தெரிந்தது. கப்பல் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.கப்பலின் இரைச்சலையும், கடல் அலைகளின் இரைச்சலையும் தவிர வேறு சத்தம் கேட்கவில்லை. காற்று வேகமாக வீசியதால் குளிர்ந்தது. கப்பலுக்குள்ளே உள்ள கடையில் எல்லா உணவுப் பொருட்களும் இருந்தன. நாங்கள் கொண்டு சென்ற உணவை உண்டுவிட்டு தேநீர் வாங்கிக் குடித்தோம். கப்பலில் தமிழ்படம் ரீவியில் போட்டார்கள். திருகோணமலையை அடையும்வரை மக்கள் கதைத்துச் சிரித்துக் கொண்டே வந்தனர். கப்பல் பயணம் எனக்கு ஒரு புதுமையான அனுபவத்தைக் கொடுத்தது.

## 48) நீர் விரும்பும் பெரியார் ஒருவர், அவரை ஏன் விரும்புகிறீர்.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பெரியார்களுள் ஆறுமுகநாவலர் அவர்கள் தலை சிறந்தவராவார். இவரையே நான் விரும்புகிறேன். நாவலரின் பணிகள் பல. சைவசமயத்திற்கான தொண்டுகள், தமிழ் வசன நடை, தமிழ்க்கல்வி, தமிழ் மொழி வளர்ச்சி, தமிழ் இலக்கியப் பணி, கல்விக் கூடங்கள் அமைத்தல், நூல் அச்சிட்டு வெளியிடல் போன்ற தலை சிறந்த பல பணிகளை ஆறுமுக நாவலர் செய்துள்ளார். இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் அச்சுயந்திரசாலைகளை அமைத்தும், பாடசாலைகளை நிறுவியும் அரும்பணியாற்றியுள்ளார். அவரது நாவன்மையைக் கண்டு வியந்து திருவாவடுதுறை ஆதீனத்தினர் அவருக்கு ‘‘நாவலர்’’ என்றும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர். அவர் அச்சிட்ட நூல்கள் எண்ணில் அடங்காதவை. அத்துடன் பாலபாடம், பாலபோதினி ,சைவவினாவிடை போன்ற நூல்களை எழுதி பாடசாலைகளில் கற்பித்தார். கோயில்களில் பிரசங்கம் செய்தார். பைபிளை தமிழில் மொழி பெயர்த்தார். இப்படி அரிய பல பணிகளை ஆறுமுக நாவலர் அவர்கள் செய்தாலும் ,அவர் கட்டிய பாடசாலையில் நான் கற்பதாலும் அவரை நான் விரும்புகிறேன்.

## 49) நான் பனை

உங்களுக்கு என்னைத் தெரியுமா? நான் உங்கள் கிராமங்களில் உள்ள தோப்புக்களில் வாழ்கிறேன். கரிய நிறமுடைய நான் மக்களுக்குச் சேவை செய்யவென்றே பிறந்திருக்கிறேன். என்னைக் கற்பகதரு என்றும் அழைப்பார்கள். எனது உடலில் உள்ள அத்தனை உறுப்புக்களும் மனிதர்களுக்குப் பயன் தரக்

கூடியவை. நான் வருடம் முழுவதும் மக்களுக்கு பிரதியுபகாரம் பாராது பயனைக் கொடுத்து வருகிறேன். வடக்கிலும் கிழக்கிலும் நாற்பதினாயிரம் குடும்பங்கள் என்னை நம்பி வாழ்வதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. நாடு முழுவதிலும் ஐந்து இலட்சம் பனைகள் இருப்பதாகக் கூறுகிறார்கள். முழுமையாக என்னைப் பயன்படுத்தினால் தேயிலை இறப்பருக்கு அடுத்தபடியான வருமானத்தை நாட்டுக்குக் கொடுப்பேன் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். என்னை வளர்த்துப் பயனைப் பெறுங்கள்.

## 50) எனது செல்லப் பிராணி

எனது செல்லப் பிராணி நாயாகும். அதற்கு வீமன் என்று பெயர் வைத்திருக்கிறேன். நான் வீட்டில் இருக்கும் வேளைகளில் என்னுடனேயே வீமனும் இருக்கும்.அதன் மேல் எனக்கு அதிக விருப்பமுண்டு. ஒவ்வொரு சனிக்கிழமையும் குளிப்பாட்டுவேன். வீட்டுக்குத் தெரியாதவர்கள் யாராவது வந்தால் அது குரைக்கும். எனது நண்பர்களை அதற்குத் தெரியும்.அவர்கள் வந்தால் குரைக்காது. வாலை ஆட்டியவாறு வரவேற்கும். இரவில் எமது வீட்டுக்கு எவரும் வரமுடியாது. சில சமயங்களில் பாய்ந்து கடிப்பது போல் செல்லும். ஆனால் இதுவரை யாருக்கும் கடித்ததில்லை. கறுப்பும் வெள்ளையும் கலந்த நிறத்தை உடைய வீமனை எனது குடும்ப உறுப்பினனாகவே நான் கருதுகிறேன்.

## 51) பத்திரிகை ஆசிரியராக நான்

பத்திரிகை ஆசிரியராக நான் கடமையாற்றுகிறேன். பத்திரிகைகளே நாட்டின் கண்கள் என்று சொல்வார்கள். பத்திரிகைகள் நீதியாகவும் ,நடுநிலையாகவும் செய்திகளைப் பிரசுரித்தல் வேண்டும். பத்திரிகைகளால் நாட்டைக் குழப்பவும் முடியும். நாட்டைக் கட்டி எழுப்பவும் முடியும். இதனைக் கருத்திற்க் கொண்டு நான் கடமையாற்றுகிறேன். நடுநிலை தவறமாட்டேன். பக்கம் சாரமாட்டேன். ஒரு செய்தியை பலமுறை வாசித்து அது சரியான செய்தி என்று தெரிந்து கொண்ட பின்பு தான் பத்திரிகையில் பிரசுரிப்பேன். ஆபாசமான கதைகள், படங்கள், கட்டுரைகளைப் பிரசுரிக்கமாட்டேன். மாணவர்களுக்கு கல்வியையும் ஒழுக்கத்தையும் போதிக்கின்ற கதைகளையும், கட்டுரைகளையும் பிரசுரிப்பேன். பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளையும் ,அவர்களது பொன்மொழிகளையும் உண்மையான செய்திகளையும் பத்திரிகை ஆசிரியரான நான் பிரசுரிப்பேன்.

## 52) நீர் நடித்த நாடகம்

எமது பாடசாலை தமிழ் ஆசிரியர் பரிசளிப்பு விழாவுக்காக ‘‘பாஞ்சாலி சபதம்’’ என்ற நாடகத்தை தயாரித்தார். அதில் நான் தருமனாக நடித்தேன். பாஞ்சாலியை துரியோதனின் அரசசபையிலும் துகிலுரியும் காட்சி மிகவும் அருமையாக இருந்தது. எனது சகோதரர்கள் அந்த அனியாயத்தைக் கண்டு

கோபம் கொண்டபோது நான் அவர்களைச் சமதானப்படுத்துவேன். அந்தக் காட்சி எனது உள்ளத்தைத் தொட்டது. எனது சகோதரர்கள் எனது சொல்லைக் கேட்டு அமைதியாக இருந்தனர். அவ்வேளை உணர்ச்சி மிகுதியால் எனது கண்கள் கலங்கின. அழுது விடுவேன்போல் இருந்தது. மிகவும் கஸ்டப்பட்டு நான் நடித்த நாடகம் அது. எனது நடிப்பை எல்லோரும் பாராட்டினார்கள் அந் நாடகம் பின்பு ஒரு முறை கோயிலில் சிவராத்திரியின் போது நடித்துக் காட்டப்பட்டது.

## 53) வானவெளியில் கிளியாகப் பறந்து திரியும் நான்

வானவெளியில் கிளியாக நான் பறந்து திரிகிறேன். என்னுடன் எனது இனத்தவர்களும் நண்பர்களும் பறந்து வருவார்கள். வான வீதியில் பறப்பது அற்புதமான ஓர் அனுபவம்ஆகும். பரந்த வானில் மிதக்கும் முகிலைத் தொடுவதற்கு எனக்கு ஆசை. அதைத் தொடுவதற்காகப் பறப்பேன். நீண்ட தூரம் பறக்கும் போது களைப்பு வந்து விடும். கீழே இறங்கி மரங்களில் இருப்பேன். நான் தினமும் வானவீதியில் பறந்து வெவ்வேறு இடங்களுக்குச் செல்வேன். அங்குள்ள விதம் விதமான பழங்களையும் ,தானியங்களையும் உண்பேன். பறவைகளைத் தவிர வேறு யாராலும் வானவிதியில் பறக்க முடியாது என்பதை நினைக்க எனக்குப் பெருமையாக இருக்கும். நான் ஓர் அழகான பறவையென்று மனிதர்கள் கூறுகிறார்கள். அழகான பறவையான நான் வான வெளியில் பறப்பதைப் பெருமையாக நினைக்கிறேன்.

## 54) தரம் 5 வகுப்பாசிரியராக நான் கடமை.....

தரம் 5 வகுப்பு ஆசிரியராக நான் கடமையாற்றுகிறேன்.நான் கற்பிக்கும் பாடசாலை மிகவும் பிரபல்யமானது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கூடுதலான மாணவர்கள் சித்தியடையும் பாடசாலை. அதில் நான் தரம் ஐந்தின் வகுப்பாசிரியராகக் கடமையாற்றுவதைப் பெருமையாகக் கருதுகிறேன். தரம் ஐந்து மாணவர்கள் மிகவும் முக்கியமான பரீட்சை எழுதுவதால் நான் திட்டமிட்டு மிகவும் அவதானமாகக் கடமையாற்றுகிறேன்.கணிதம் , ஆங்கிலம், தமிழ், சுற்றாடல், ஆரம்ப விஞ்ஞானம், அழகியல், ஆக்கம் ஆகிய அனைத்துப் பாடங்களிலும் பரீட்சைக்கு வினாக்கள் வரும். அதனால் கவனமாகத் திட்டமிட்டு நல்ல முறையில் கற்பித்து வருகிறேன். அதிபரும் மற்றய ஆசிரியர்களும் பெற்றோரும் என்னில் நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடக்க வேண்டியது எனது கடமையாகும். அதனால் புலமைப்பரிசில் மாதிரி வினாக்கள் பல தயாரித்து மாணவர்களுக்குக் கொடுப்பேன். மாலை வேளைகளிலும் சனி,ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் மேலதிக வகுப்புக்களை நான் நடாத்துவேன்.

## 55) வானொலி அறிவிப்பாளராக கடமையாற்றும்.......

வானொலி அறிவிப்பாளராகக் கடமையாற்றும் நான் மிகவும் மகிழ்வுடன் எனது தொழிலைச் செய்கிறேன். வானொலி அறிவிப்பாளராகக் கடமையாற்றுவது மிகவும் கஸ்டமானதாகும். நிகழ்ச்சிகளை அறிவிக்கும் போதும் விளம்பரங்களை ஒலிபரப்பும் போதும் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். நிகழ்ச்சிகளை நேயா்கள் ரசித்துக் கேட்கும் படியாகத் திட்டமிட்டு தயாரித்தல் வேண்டும். நான் மிகவும் அவதானமாக நிகழ்ச்சிகளை அறிவிப்புச் செய்வேன். அறிவிப்பாளருக்கு நல்ல குரல்வளம் தேவை அத்துடன் உள்ள குரல் வளத்தை விருத்தி செய்தல் வேண்டும். குரல் வளத்தைப் பாதுகாத்தல் வேண்டும். அதற்கான பயிற்சிகளில் நான் அடிக்கடி ஈடுபடுவேன். செய்திகள் வாசிப்பது, விளையாட்டுச் செய்திகளை அறிவிப்பது. விளையாட்டுப் போட்டியின் போது நோ்முக வா்ணனை செய்வது போன்றவற்றையும் நான் செய்து வருகிறேன். எனது தொழிலை நான் மிகவும் விரும்புகிறேன்.

## 56) நீா் சென்ற கல்விச் சுற்றுலா

நானும் எனது வகுப்பு மாணவா்களும் எமது வகுப்பாசிரியருடன் பூந்தோட்டம் ஒன்றைப் பாா்க்கச் சென்றோம். நாங்கள் சென்ற பூந்தோட்டம் மிகவும் பெரியது. பலவகையான பூக்கள் மலா்ந்து சிரித்தன. பூக்களில் இத்தனை வா்ணங்களா? பாா்க்கப் பாா்க்க ஆசையாக இருந்தது. இது நாள்வரையும் அரிய பல பூக்களைப் படங்களில் தான் பாா்த்தேன். அன்று தான் நேரில் காணும் வாய்ப்புக் கிடைத்தது. பூந்தோட்டத்தில் நாம் சென்ற இடமெல்லாம் கமகம வென நறுமணம் வீசியது. இனிமையான தென்றல் பூவில் பட்டு எம்மை வந்து தழுவிய போது மிகவும் சந்தோசமாக இருந்தது. சுற்றாடல் விஞ்ஞான பாடங்களில் நான் படித்த பலவற்றை ஆசிரியா் நேரில் காண்பித்து விளக்க மளித்தாா். பூந்தோட்டத்தில் செயற்கை நீரூற்று ஒன்று செய்யப்பட்டிருந்தது. ஊஞ்சல், இராட்டினம் என்பவையும் அமைக்கப்பட்டிருந்தன. அதில் ஏறி நாம் விளையாடினோம். நாம் பூந்தோட்டத்தைப் பாா்த்து விட்டுத்திரும்பிவரும் வழியில் பெரியதொரு சிவன் கோயிலையும் பாா்வையிட்டோம். ஆசிரியா் அங்குள்ள மண்டபங்கள், கொடித்தம்பம், பலிபீடம் முதலியவற்றைக் காண்பித்து விளக்கமளித்தாா். பூசை முறைகள், கோயிலுக்குச் செல்லும் முறைகளைப் பற்றியும் விளக்கமளித்தாா். மிகவும் பயனுள்ள கல்விச் சுற்றுலா அது.

## 57) ஒலிம்பிக் போட்டி

ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் கிரேக்க நாடாகும். ஒலிம்பிக் மலையடி வாரத்தில் கிரேக்கா் தமது வீரக்கடவுளான சியஸ் கடவுளை மகிழ்விக்க விளையாட்டுப் போட்டிகளை நடாத்தினாா். அவ்விளையாட்டு காலப்போக்கில் உலகெங்கும் பரவியது. ஒலிம்பிக் போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும். ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரா்களுக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை. ஒலிம்பிக் கொடி வெள்ளை நிறமானது.அக்கொடியில் கறுப்பு ,நீலம், மஞ்சள், பச்சை,சிவப்பு,

நிறங்களால் ஆன ஐந்து வளையங்கள் உள்ளன. இந்த ஐந்து நிறங்களில் ஒரு நிறமானது போட்டியில் கலந்து கொள்ளும் நாடுகளின் கொடிகளில் காணப்படும். இவ் ஐந்து வளையங்களும் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்ரேலியா,அமெரிக்கா என்னும் ஐந்து கண்டங்களைக் குறிக்கும். ஒலிம்பிக் தீபம் கிரிஸ் நாட்டிலுள்ள ஒலிம்பியாவில் பற்ற வைக்கப்பட்டு போட்டி நடைபெறும். நாட்டிற்கு ஓட்ட வீரர்களால் கொண்டு செல்லப்படும். ஒலிம்பிக் போட்டியில் முதற் பரிசைப்பெறுபவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படும். இரண்டாவது பரிசைப் பெறுபவருக்கு வெள்ளிப்பதக்கமும், மூன்றாவது பரிசைப் பெறுபவருக்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப்படும். முதற்பரிசைப் பெறும்போது பெறுபவரின் நாட்டு தேசிய கீதம் இசைக்கப்படும். ஒலிம்பிக் போட்டிகள் உலக நாடுகளிடையே ஒற்றுமையும் நட்புறவையும் ஏற்படுத்துவதற்காக நடாத்தப்படுகின்றன.

## 58) நிர் விரும்பும் ஓவியம்

உலகிலே பல ஓவியர்கள் இருந்திருக்கிறார்கள். எல்லோரது ஓவியங்களையும் பார்க்கும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. பல ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை. அப்படிப் புகழ் பெற்ற ஓவியமான மோனலிசா ஓவியத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. மிகவும் அற்புதமாக லியான-டோ- டார்வின்சி அவ் ஓவியத்தை வரைந்துள்ளார். டாவின்சி ஒரு பொறியியலாளர் ஆவார். ஆனால் அவர் ஓவியத்திலும், சிற்பத்திலும் அதிக அக்கறை காட்டினார். மோனலிசா ஓவியம் புன்னகை பூக்கும் ஒரு பெண்ணின் ஓவியமாகும். அவ் ஓவியம் பரீஸ் நகரத்தில் உள்ள ஓர் அரும் பொருள் காட்சியகத்தில் பாதுகாப்பாகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. அவ் ஓவியத்தைப் பார்த்த பலர் அதைப் போலத்தாமும் வரைந்தனர். ஆனால் இன்று வரை டார்வின்சி வரைந்ததைப் போல் எவராலும் வரைய முடியவில்லை. மிகவும் ஒப்பற்ற ஓவியரான டார்வின்சி இத்தாலி நாட்டில் 1452 ஆம் ஆண்டு பிறந்தார். எண்ணற்ற அழகிய பல ஓவியங்களை வரைந்த அவர் 1519 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## 59) தொலைக்காட்சி

இன்று மக்களின் பிரதான பொழுது போக்குச் சாதனமாகவும், தகவல்களையும், செய்திகளையும், அறிந்து கொள்ளும் சாதனமாகவும் தொலைக் காட்சி விளங்குகின்றது.உலகில் நடைபெறும் செய்திகளை நாம் உடனுக்குடன் தொலைக்காட்சி மூலம் அறிந்து கொள்கிறோம். உலகில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் ,கலைநிகழ்வுகள் போன்றவற்றை வீட்டிலிருந்து தொலைக்காட்சி மூலம் பார்த்து இரசிக்கின்றோம். உலகில் நடைபெறும் மோசமான, விமான, புகையிரத, வாகன விபத்துக்களையும், உலகில் நடைபெறும் போர்களையும் ,தொலைக்காட்சியில் பார்க்கிறோம். இதை விடச் சினிமாப்படங்கள், நடனங்கள் ,நாடகங்கள், இலக்கிய நிகழ்வுகள், விவாதங்கள் போன்றவற்றையும் தொலைக்காட்சியில் கண்டு களிக்கின்றோம்.

கல்விக்கு தொலைக்காட்சியாற்றும் பங்கு அளப்பரியது. கல்வி அமைச்சு பகல்வேளைகளில் பல கல்வி நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்புவதால் மாணவர்கள் பெரும் பயன் பெறுகின்றனர். பரீட்சைக் காலங்களில் மாதிரி வகுப்புக்கள் பல தொலைக்காட்சியில் நடைபெறுவது வழக்கம். தொலைக்காட்சி இன்று மனிதனுக்கு பல வழிகளிலும் உதவி புரிந்து வருகிறது.

## 60) பேரூந்து வண்டியில் நடத்துனராக இருந்து

அரச பேரூந்து வண்டியில் நடத்துனராக இருந்து சேவையாற்றுகிறேன். நான் கடமைசெய்யும் பேரூந்து வண்டி இம்மாதம் முழுதும் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வரை சென்று திரும்பும். சில வேளைகளில் எமது மேலதிகாரி வேறு பாதைகளால் செல்லும் பேரூந்துகளுக்கும் நடத்துனராக பணியாற்றுமாறு என்னைப் பணிப்பதும் உண்டு. பேரூந்தில் நடத்துனராகக் கடமையாற்றுவது சிரமமானதாகும். பல்வேறு வகையான தொழில்களைச் செய்வோர் தமது பொருட்களுடன் பேரூந்தில் பயணஞ் செய்ய வருவார்கள். சிலர் புரிந்துணர்வுடன் செயற்படுவார்கள், சிலர் வாதப் பிரதிவாதம் செய்வார்கள். வயோதிபர்கள் பயணம் செய்யும் போது சிரமப்படுவார்கள். அவர்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்வேன். எனது சேவையும் ஓர் அத்தியாவசிய சேவையாகும். நான் எனது தொழிலை மிகவும் கண்ணியமாகச் செய்து வருகிறேன். அதனால் மனநிறைவு பெற்றுள்ளேன்.

## 61) எனது வகுப்பாசிரியர்

எனது வகுப்பாசிரியர் திருமதி வசுமதி இராமநாதன் ஆவார். அவர் மிகவும் அழகான ஆசிரியர். அன்புள்ளம் கொண்டவர். மாணவர்கள் எல்லோரினதும் பண்புகளையும், அவர்களது குடும்ப நிலையையும் உணர்ந்தவர்.மாணவர்களைத் தன்னுடைய பிள்ளைகளாகக் கருதி நேசிப்பவர். பாடவேளையில் மிகவும் கண்டிப்பானவர். ஒழுங்காக நல்ல முறையில் எமக்கு விளங்கக் கூடியதாகக் கற்பிப்பார். விளங்காவிட்டால் திரும்பத்திரும்பச் சொல்லித் தருவார். வீட்டு வேலைகளைச் செய்யாமல் சென்றால் அவருக்குச் சரியான கோபம் வரும். அதனால் சில வேளைகளில் தண்டனையும் கிடைக்கும். மாணவர்களது பிறந்த தினத்தன்று மாணவர்களை வாழ்த்தி பரிசும் கொடுப்பார். பரீட்சைகள் நடைபெறும் போது கூடுதலான புள்ளிகள் பெறும் மாணவர்களுக்குப் பரிசுகள் கொடுப்பார். எனக்கு அவரின் மீது அளவில்லாத அன்பு உண்டு. ஒரு நாள் கூட அவரைப் பாராமல் என்னால் இருக்க முடியாது. அவர் பாடசாலைக்கு வராத நாட்களில் நான் அவரின் வீட்டுக்குச் சென்று அவரைப்பார்ப்பேன்.

## 62) எனக்குப் பிடித்த விளையாட்டு

எனக்குபிடித்த விளையாட்டு கிரிக்கெட்டாகும். எனது பாடசாலையின் கிரிக்கெட் குழுவில் நானும் ஓர் உறுப்பினன். எனக்குப் பந்து வீசுவது தான் பிடிக்கும். சுழல் பந்து வீச்சாளரான நான் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளின் போது விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளேன். பாடசாலைவிட்ட பின்பும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறை தினங்களிலும் பாடசாலை மைதானத்தில் பயிற்சியில் ஈடுபடுவேன். பாடசாலை அதிபர் பயிற்றுவிப்பாளர் ஒருவரை நியமித்துள்ளார். அவரின் வழிகாட்டலில் சிறந்த சுழற்பந்து வீச்சாளராக வருவதே எனது நோக்கமாகும். தொலைக்காட்சியில் கிரிக்கெட் போட்டிகள் ஒளிபரப்பாகும் வேளைகளில் தவறாது அவற்றைப் பார்த்து ரசிப்பேன். எனக்குப் பிடித்த பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஆவார். அவரையே எனது குருவாக ஏற்றுள்ளேன். அவர் சமீபத்தில் விபத்துக்குள்ளானது எனக்கு மிகுந்த கவலையை அளித்துள்ளது.

## 63) எனது பொழுது போக்கு

பொழுது போக்குகள் பலவகையானவை. ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்தமான பொழுது போக்குகளில் ஈடுபடுவதுண்டு. எனது பொழுது போக்கு முத்திரை சேகரிப்பதாகும். என்னிடம் பல நாட்டைச் சேர்ந்த பல அழகான முத்திரைகள் உள்ளன. அவற்றை முத்திரை சேகரிக்கும் புத்தகத்தில் ஒட்டி பௌத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். எனது இனத்தவர்கள் பலர் பல்வேறு உலக நாடுகளில் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு எனது பொழுது போக்கைப் பற்றி எழுதி அந்தந்த நாட்டு முத்திரைகளை அனுப்பி வைக்குமாறு கேட்பேன். அவர்களும் அனுப்பி வைப்பார்கள். இங்கிலாந்து தேசத்தின் அறுபது முத்திரைகள் என்னிடம் உண்டு. அதே போல் கனடா, நோர்வே, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, யப்பான், போன்ற நாடுகளின் முத்திரைகள் பலவும் என்னிடம் உண்டு. இந்தியாவின் முத்திரைகள் எனக்குக் கிடைப்பது குறைவு. தமிழ் நாட்டைச் சேர்ந்த பெரிய சாமி அருணன் என்பவர் எனது பேனா நண்பர். நான் என்னிடம் மேலதிகமாக உள்ள முத்திரைகளை அனுப்பி அவரிடமிருந்து இந்திய முத்திரைகளைப் பெறுகிறேன். முத்திரைகள் அழகானவை. விதம் விதமானவை. பூக்கள், விலங்குகள், பறவைகள், நாடுகளின் பிரதான சின்னங்கள் போன்றவற்றைக் கொண்டவை. அவற்றைப் பார்க்க ஆசையாக இருக்கும். எனது பாடசாலை நண்பர்களும் ,ஆசிரியர்களும் நான் சேர்த்து வைத்திருக்கும் முத்திரைகளைப் பார்த்து ரசிப்பார்கள்.

## 64) கணனி

கணனி ஒரு மின்னணுச் சாதனமாகும். மனிதன் கண்டு பிடித்த சாதனங்களுள் கணனி மிகவும் அற்புதமானதும். அவசியமானதும் ஆகும். மனிதனது பெரும்பான்மையான செயல்களுக்கு துணைபுரியும் சாதனமாகவும் கணனி விளங்குகிறது. கல்வித்துறையில் கணனியின் பங்கு அளப்பரியது. மேலை நாடுகளில் கணனி ஆசிரியராகக் கடமையாற்றுகிறது. கோபமோ, எரிச்சலோ கொள்ளாது. விளங்காதவற்றைத் திரும்பத்திரும்பச் சொல்லித் தரும்.

க.பொ.த உயர்தரப் பரீட்சை, சாதரண பரீடசை, புலமைப்பரிசில பரீட்சைப் பெறுபேறுகள் விரைவாக வெளிவர கணனி உதவி புரிகிறது. கணனியை இன்று சகல துறைகளிலும் பயன்படுத்துகிறார்கள். அழகான பல ஓவியங்களை இப்பொழுது கணனிகள் வரைகின்றன. பாடல்களுக்குக் கணனிகள் இசை அமைக்கின்றன. கேம்பிரிச் பல்கலைக்கழகத்தின் கணிதப் பேராசிரியர் சார்வஸ் பஜேஜ் என்பவரே கணனியைக் கண்டுபிடித்தவராவார். இன்று அவர் கண்டு பிடித்த கணனி நவீன மயப்படுத்தப்பட்டுள்ளது. இன்று கணனிகள் இல்லாமல் உலகம் இயங்கமாட்டாத நிலை உருவாகி உள்ளது. இன்றுள்ள சிறு குழந்தைக்குக் கூட கணனியின் அறிவு தேவையானதாக உள்ளது.

## 65) நான் குடும்பத்தினருடன் உறவினரின் திருமணச் சடங்கிற்குச் சென்று....

நான் குடும்பத்தினருடன் உறவினர் ஒருவரின் திருமணச் சடங்கிற்குக் காரில் சென்று இறங்கினேன். திருமணம் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது. மண்டப வாசலில் இரு பெரிய கதலி வாழைக்குலைகள் கட்டப்பட்டிருந்தன. மண்டபத்தின் முன்பகுதி அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. உள்ளே நாதசுரம் வாசித்துக் கொண்டிருப்பது வெளியே கட்டப்பட்டிருந்த ஒலி பெருக்கியினூடாகக் கேட்டது. நாங்கள் உள்ளே சென்றோம். அம்மாவும் அக்காவும் பெண்களின் பகுதியில் சென்று அமர்ந்தனர். என்னையும் அப்பாவையும் உறவினர் ஒருவர் சந்தனம் தந்து வரவேற்றார். திருமண மண்டபம் மலர் மாலைகளாலும் , வர்ணக்கடதாசிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மணவறையில் மணமக்கள் அமர்ந்திருந்தனர். குருக்கள் ஒருவர் திருமணக் கிரிகைகளைச் செய்து கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் கெட்டி மேளம் கொட்டியது. மணமகன் மணமகளின் கழுத்தில் தாலி கட்டினார். பின்பு மணமக்களை எல்லோரும் வாழ்த்தி அன்பளிப்புப் பொருட்களைக் கொடுத்தனர். அப்பாவும் நானும் சென்று வாழ்த்தினோம். எம்மைப் படம் எடுத்தனர். பின்பு மதிய உணவு அருந்தி விட்டு வீடு திரும்பினோம்.

## 66) இன்ரநெற்

இன்ரநெற் மூலம் நாம் பெறும் பயன்கள் அதிகம். தகவல், செய்தி போன்றவற்றை ஒரு செக்கனில் உலகின் எப்பகுதியிலிருந்தும் இன்ரநெற் மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஓரிரு செக்கனில் கடிதம் எழுதி பதிலையும் பெற்றுக் கொள்ளலாம். இதைவிட உலகில் உள்ள செய்தித் தாள்கள், இலக்கியங்கள் , கட்டுரைகள், சினிமாக்கதைகள், சித்திரங்கள்,இசைகள் ,பாடல்கள், முதலியவற்றையும் அறிந்து கொள்ளலாம். கேட்டு ரசிக்கலாம். உலகில் உள்ள விமான ,புகையிரத நிலையங்களில் இருந்து விமானங்கள் ,புகையிரதங்கள் புறப்படும் நேரங்களையும் அறிந்து கொள்ளலாம். இன்ரநெற் சிறுவர்களுக்கு சிறந்த ஒரு பொழுது போக்குச் சாதனமாகவும் விளங்குகிறது. வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் எங்கிருந்தாலும் இன்ரநெற் மூலம் தொடர்பு கொண்டு

மாணவர்கள் கல்வி கற்க முடியும். இப்படிப் பல வழிகளில் இன்ரநெற் மக்களுக்கு உதவி செய்கின்றது.

## 67) நான் பார்த்த விளையாட்டுப் போட்டி

அன்மையில் வலி கிழக்கு செயலா் பிரிவில் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி கோப்பாய் திறந்த வெளி அரங்கில் நடைபெற்றது. கோப்பாயில் உள்ள பல விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டியில் பங்கு பற்றின. பெரும்பாலும் அன்று சுவட்டு நிகழ்ச்சிகளே கூடுதலாக இடம்பெற்றன. நூறு மீற்றா்,இருநூறுமீற்றா் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடை பெற்றன. எல்லா ஓட்ட வீரர்களும் மிகவும் உற்சாகமாகப் போட்டியில் கலந்து கொண்டனா். ஈட்டிஎறிதல், குண்டுபோடுதல், தட்டெறிதல போன்ற மைதான நிகழ்ச்சிகளும் நடைபெற்றன இடைவேளையின் போது கோப்பாய் நாவலா் வித்தியாலய மணவா்களின் உடற்பயிற்சிக் கண்காட்சி நடைபெற்றது. பொறுப்பாசிரியா் திருமதி.ச.அ..சில்வெஸ்ரா் மிகவும் கஸ்டப்பட்டு அமைத்திருந்த அந் நிகழ்ச்சி அருமையாக இருந்தது. அதன் பின் விநோத உடைப் போட்டி நடைபெற்றது. போட்டியாளா்கள் விநோதமான உடைகளை அணிந்து மைதானத்தை வலம் வந்தனா். அதன் பின் அஞ்சலோட்டம் நடைபெற்றது.இறுதியாக பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் பிரதேசச் செயலா் திரு. கேதீஸ்வரன் போட்டியில் வென்றவா்களுக்குப் பரிசில்களை வழங்கினாா்.

## 68) பட்டம் கட்டி நான்......

அழகான பட்டம் ஒன்றைக் கட்டி நான் வானத்தில் பறக்க விட்டேன். காற்று பலமாக வீசியதால் பட்டம் உயரஉயரப் பறந்தது. எனது நண்பர்கள் நான் கட்டிய பட்டத்தைப் பார்த்து ரசித்தனா். அத்துடன் என்னைப் பாராட்டினா். பட்டத்தின் விண் இனிமையாக ஒலித்தது. அதன் ஓசை யாழ் வாசிப்பது போல் இருந்தது. அழகான குஞ்சங்கள் பட்டத்தின் இரு பக்கங்களிலும் தொங்கின. பல நிறம் கொண்ட வண்ணப் பறவையொன்று வானத்தில் பறப்பது போல் நான் கட்டிய பட்டம் பறந்தது. அதைப் பார்க்கப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அதன் வால் நெளிந்து நெளிந்து அசைந்தது. எனது சகோதரர்கள் மகிழ்ச்சியுடன் அதைப் பார்த்து ரசித்தனா்.

## 69) நான் பார்த்த கலை விழா

அண்மையில் எமது ஊரில் திறந்த வெளியரங்கில் எமது கிராம இளைஞர்கள் கலைவிழா ஒன்றை நடத்தினர். இயல், இசை,நாடக நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியர் சங்கீத பூசணம் வேலாயுதபிள்ளை அவர்கள் நல்லதொரு இசைக்கச்சேரி வைத்தார். பக்க வாத்தியங்களுடன் அவர் பாடியது மிகவும் நன்றாக இருந்தது. கலைச்சுடர் நாடக மன்றத்தினர் சத்தியவான் சாவித்திரி என்ற இசை நாடகத்தை மேடையேற்றினர். அந்நாடகம் மிகவும் நன்றாக இருந்தது. சத்தியவானாகவும் ,சாவித்திரியாகவும் நடித்தவர்கள் மிகவும் அருமையாக நடித்தனர். அத்துடன் கலைவாணி சனசமுக நிலையத்தினர் ‘‘சமூகத்தை மேம்படுத்துவது பணமா ஒழுக்கமா’’ என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஒன்றை வைத்தனர். சமூகத்தை மேம்படுத்துவது ஒழுக்கம் என வாதிட்ட அணியினர் மிகவும் நன்றாக வாதிட்டனர். நல்ல கருத்துக்களைக் கூறினர். மொத்தத்தில் கலைவிழாவில் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக இருந்தன.

## 70) நான் வளர்த்த பூ மரங்கள்

நான் வளர்த்த பூமரங்கள் தற்போது பூத்துக்குலுங்குகின்றன. நான் வளர்த்த பூமரங்களில் பூத்திருக்கும் பூக்களைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். நான் வளர்த்த பூமரங்களில் பெரும்பாலானவை ரோஜாச் செடிகளாகும். சிவப்பு,மஞ்சள்,ரோஸ், கரும்சிவப்பு, வெள்ளை போன்ற பல நிற ரோஜாச் செடிகள் பலவற்றை நான் வளர்த்து வைத்திருக்கிறேன். அவை எல்லாம் தினமும் பல அழகான பூக்களைப் பூக்கும். மங்கள நிகழ்வுகளுக்குச் செல்லும் பெண்கள் பலர் நான் வளர்த்த ரோஜாப் பூமரங்களில் மலர்ந்த பூக்களை ஆசையோடு கேட்பார்கள். நான் அவர்களுக்கு பூக்களைப் பறித்துக் கொடுப்பேன். அவர்கள் என்னைப் பாராட்டுவார்கள். நான் வளர்த்த பூ மரங்களில் பூத்த மலர்களைப் பறித்து மாலை கட்டி கோயிலுக்குக் கொடுப்பேன். அதனால் எனது மனமும் மலரும். நான் வளர்த்த பூமரங்கள் எனது உடன் பிறப்புக்களைப் போல நேசிக்கிறேன். என்னுடன் கற்கும் பாடசாலை மாணவர்கள், நண்பர்கள், அயலவர்கள் அடிக்கடி வந்து நான் வளர்க்கும் மரங்களைப் பார்வையிடுவார்கள். கன்றுகள் உற்பத்தி செய்து தமக்கும் தருமாறு கேட்பார்கள். நான் வளர்த்த பூமரங்களைப் பார்த்து ரசிப்பதும்,பராமரிப்பதும் எனது பொழுது போக்காகும்.

## 71) புத்தகத்தின் சுயசரிதை

நான் தரம் நான்கின் பழைய தமிழ்ப்புத்தகமாவேன். வாழைச்சேனையில் செய்த கடதாசி மூலம் கொழும்பில் உள்ள அரச அச்சகமொன்றில் நான் அச்சடிக்கப்பட்டேன். பின்பு கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து கோப்பாயில் உள்ள ஒருபாடசாலைக்கு அனுப்பப்பட்டேன். அதிபர் என்னை பிரதீபன் என்ற மாணவனுக்குக் கொடுத்தார். அவன் எனக்கு அழகான உறையிட்டு கவனமாகப் பாவித்தான். தினமும் பயபக்தியுடன் என்னை எடுத்துப் படிப்பான். பின் அவன் தரம் நான்கு சித்தியடைந்ததும், என்னை வகுப்பாசிரியரிடம் கொடுத்தான்.

வகுப்பாசிரியர் அந்த வருடம் தரம் நான்கிற்கு வந்த கலைச்செல்விக்கு என்னைக் கொடுத்தார். கலைச்செல்வியும் என்னை அழகுபடுத்தி தனது புத்தகப்பைக்குள் வைத்திருந்தாள். தினமும் அவள் என்னை எடுத்துப் படிப்பாள். அவள் படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. அதனால் எனக்கு பெருமையாக இருக்கும். ஒரு வருடம் செல்ல கலைச்செல்வி தரம் நான்கு சித்தியடைந்ததால் என்னை மீண்டும் வகுப்பாசிரியரிடம் கொடுத்தாள். இப்பொழுது புதிய பாடத்திட்டம் தரம் நான்கில் செயற்படுத்தப்படுவதால் என்னையும், எனது தோழர்களையும் கழிவுப் பொருட்களை வைக்கும் அறைக்குள் வைத்துள்ளனர். இப்பொழுது என்னைத் தேடுவாரில்லை. கறையான்களும் ,கரப்பான்களும் மெல்ல மெல்ல என்னை உண்கின்றன. மதிப்பு மரியாதையுடன் இருந்த எனக்கு இந்த நிலை வந்தது கவலைதான். என்ன செய்ய முடியும். எனது விதியை நினைத்துப் புலம்புகின்றேன்.

## 72) நான் செய்த காலை உணவு

அன்று சனிக்கிழமை பாடசாலை இல்லாததால் வீட்டில் இருந்தேன். கடந்த இரண்டு மூன்று தினங்களாக அம்மாவுக்குக் காய்ச்சல். அதனால் அவவால் காலையில் எழுந்திருக்க முடியவில்லை. அதனால் முதல் முறையாக நான் காலை உணவைச் செய்யத் தயாரானேன். முதலில் பானையில் நீா எடுத்தேன். குக்கரை மூட்டிவிட்டு பானையைத் தூக்கி குக்கரின் மேல் வைத்தேன். பின் ஒரு கிண்ணத்தை எடுத்து அதனுள் வாளியுள் இருந்த மாவை அள்ளிப் போட்டேன். திருகுவலையை எடுத்து தேங்காய் துருவினேன். நீா கொதித்ததும் அதை மாவில் விட்டுக் கிண்டினேன். அளவாக உப்பும் சேர்த்தேன். பின் குழைத்த மாவுடன் தேங்காய்த்துருவலைக் கலந்து நீத்துப் பெட்டியுள்வைத்தேன். பின் அதை குக்கரில் கொதித்துக் கொண்டிருந்த நீர்ப் பானையின் மேல் வைத்து முடினேன். சிறிது நேரத்தில் பிட்டு தயாரானது. முதல் நாள் வைத்த கறியுடன் நாங்கள் அதை உண்டோம். அப்பா ''பிட்டு நல்லாயிருக்கிறது'' என்றார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

## 73) விபத்துக்குள்ளான ஒருவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று

விதியில் விபத்துக்குள்ளான வயோதிபர் ஒருவரை நான் காரில் கொண்டு சென்று வைத்தியசாலையில் அனுமதித்தேன். தலையிலும், கால்களிலும், பலத்த காயங்களுக்குள்ளாகியிருந்தார். அதனால் இரத்தம் அதிகமாக வெளியேறிக் கொண்டிருந்தது. அவரை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்தனர். அவர் வீதியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது விபத்துக்குள்ளானதால் அவரை யாரென்று உடனடியாக அடையாளம் காணமுடியவில்லை. சேட் பொக்கற்றுக்குள் அவரது தேசிய அடையாள அட்டை இருந்ததாக வைத்தியசாலையில் தெரிவித்தனர். அதில் எழுதப்பட்டிருந்த அவரது முகவரியைக் குறித்துக் கொண்டு அவரது வீட்டுக்குச் சென்று அறிவித்தேன். அவரது பிள்ளைகள் என்னுடன் வைத்தியசாலைக்கு வந்தனர். விபத்துக்குள்ளானவர் ஓய்வு பெற்ற ஆசிரியராவார். நான் செல்லும்போது அவர்

சுய நினைவை இழந்திருந்தார். அவரது பிள்ளைகளும் உறவினர்களும் எனக்கு நன்றி தெரிவித்தனர்.

## 74) காலைக்காட்சி

இயற்கை தனது திறமைகளை காலையிலும், மாலையிலும் காட்டுவதுண்டு. காலைக்காட்சியும், மாலைக்காட்சியும் மனத்திற்குச் சந்தோஷத்தைத் தருவதால் மக்கள் காலையிலும், மாலையிலும் கோயில்களுக்கும், கடற்கரைகளுக்கும் செல்வது வழக்கம். காலையில் பறவைகள் நேரத்துடன் எழுந்து இனிமையாகக் கலகலக்கும். காகங்கள் கரையும். குயில்கள் கூவும். சேவல் தனது சிறகுகளை படபடவென அடித்து கூவிச் சூரியனை வரவேற்கும். கமக்காரர் தோட்டங்களுக்கு காய்கறிகளைப் பறிப்பதற்காகச் செல்வார்கள். கோயில்களில் ஒலிக்கும் காண்டாமணி ஓசை காதுகளை இனிக்கச் செய்து கடவுளின் நினைவை உண்டாக்கும். பக்தர்கள் அழகான பூக்களைப் பறித்து மாலை கட்டிக் கொண்டு கோயில்களுக்குச் செல்வார்கள். குளங்களில் தாமரை மலர்கள் சூரியனின் வரவை வாழ்த்தி மலர்ந்து வரவேற்கும். கிழக்கு வானம் சிவந்து சூரியனைப் பிரசவிக்கும். பிள்ளைகள் நேரத்துடன் நித்திரைவிட்டெழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு பாடசாலைக்குப் புறப்படுவார்கள்.

## 75) எனது தாத்தா

எனது தாத்தாவின் பெயர் திருநாவுக்கரசு. அவர் எமது ஊரில் உள்ள பாடசாலை ஒன்றில் அதிபராகக் கடைமையாற்றி பத்து வருடங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றவர். நானும் எனது சகோதரர்களும் நண்பர்களும் ஓய்வான நேரங்களில் அவரின் அருகிலேயே இருப்போம். அவர் எமக்கு நல்ல நல்ல கதைகளைச் சொல்லுவார். இனிமையாகப் பாடுவார். பஞ்ச புராணங்களைப் பண்ணுடன் பாடி எம்மையும் பாடச் சொல்லுவார். கணிதம், தமிழ், ஆங்கிலம் முதலிய பாடங்களை எமக்குச் சொல்லித் தருவார். பாடசாலையில் நான் நடிக்கும் நாடகத்தை அவருக்கு நடித்துக் காட்டுவேன். அதைத் திருத்தி நன்றாக நடித்துக் காட்டுவார். அத்துடன் அவர் எம்முடன் நல்லதொரு நண்பனைப் போலவே பழகுவார். நாங்கள் தவறு செய்யும் போதெல்லாம் புத்திமதிகள் சொல்லி எம்மைத் திருத்துவார். எனக்கு அவர் மீது சரியான விருப்பம்.

## 76) நான் ஒரு விளையாட்டு வீரனானால்

நான் ஒரு விளையாட்டு வீரனானால் தேசிய ரீதியில் பல பரிசுகளைப் பெற முயல்வேன். அப்படி தேசிய ரீதியில் எனக்குப் பரிசுகள் கிடைத்தால் கடும் பயிற்சியில் ஈடுபடுவேன். விடாமுயற்சியுடன் பயிற்சியில் ஈடுபட்டு உலக நாடுகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வேன். எனது விளையாட்டுத் திறமையால் எனது பெற்றோருக்கும், நான் கற்ற பாடசாலைக்கும், நான் பிறந்த நாட்டிற்கும் பெருமையைத் தேடிக் கொடுப்பேன். அத்துடன் நான்

ஒரு விளையாட்டு வீரனானால் எனது பாடசாலை மாணவா்களுக்கு விளையாட்டில் பயிற்சி கொடுப்பேன். விளையாட்டுக்களின் மூலம் உடல் உறுதி பெறும். விளையாட்டுக்கள் ஒற்றுமையையும் புரிந்துணா்வையும் நட்பையும் உண்டாக்கும். என்பதை நான் பயிற்சி கொடுக்கும் மாணவா்களுக்குப் புரிய வைப்பேன். எனது ஆசை ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதே. முயற்சி உடையாா் இகழ்ச்சியடையாா் என்பதற்கிணங்க எனது ஆசைகள் நிறைவேறு மென நான் நினைக்கிறேன்.

## 77) நான் கழித்த விடுமுறை

சென்ற வருடம் ஆவணி மாத விடுமுறையின் போது நான் கொழும்பில் இருக்கும் எனது மாமாவின் வீட்டுக்குச் சென்றேன். மாமாவின் குடும்பத்தினருடன் கொழும்பில் உள்ள பல இடங்களைப் பாா்த்தேன். விகாரமகாதேவி பூங்காவுக்கும் சென்றேன். அப்பூங்கா மிகவும் பெரியது. அத்துடன் அழகானது. அங்குள்ள சிறுவா்களுக்கான விளையாட்டு உபகரணங்களைச் சொல்லி முடிக்க முடியாது. அங்குள்ள ஊஞ்சலில் ஏறி ஆடினேன் புகைவண்டியில் ஏறிப்பயணஞ் செய்தேன். இராட்டணத்தில் ஆடினேன். அங்குள்ள பெரியதொரு யானையில் ஏறிச் சவாரி செய்தேன். இன்னொருநாள் மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்று அங்குள்ள மிருகங்களையும் பறவைகளையும் பாா்த்து இரசித்தேன். தொட்டிகளில் துள்ளி விளையாடும் அழகான மீன்களைப் பாா்த்தேன். பின் ஒரு நாள் கதிா்காமம் சென்று கதிரமலையில் ஏறி முருகனை வணங்கினேன். மாணிக்க கங்கையில் குளித்தேன். இன்னொரு நாள் பேராதனைப் பூங்காவுக்குச் சென்றேன். இப்படி எனது ஆவணி மாத பாடசாலை விடுமுறை நாட்கள் மிகவும் மகிழ்ச்சியாகக் கழிந்தன.

## 78) நான் ஓா் ஓவியரானால்

நான் ஓா் ஓவியரானால் இயற்கைக் காட்சிகளை வரைவதிலேயே அதிகம் ஈடுபடுவேன். இயற்கைக் காட்சிகள் மிகவும் அழகானவை. அவற்றை வரைவது ஓா் அற்புதமான அனுபவமாகும். காலைக்காட்சி, மாலைக்காட்சி, கடற்கரைக்காட்சி, என்பவற்றை நான் இரசித்துப் பாா்ப்பேன். இவை எனது மனதைக் கொள்ளை கொள்வதுண்டு. அத்தகைய காட்சிகளை அழகாக வரைந்து பிறேம் போட்டு சுவரில் மாட்டி வைப்பேன். நான் ஓா் ஓவியரானால் சித்திரப் போட்டிகளில் கலந்து பரிசுகள் பெற முயற்சிப்பேன். நல்ல பல ஓவியங்களை வரைந்து சித்திரக் கண்காட்சி வைப்பேன். எனக்குப் பிடித்த ஓவியா் லியான- டோ- டாா்வின்சி ஆவாா். இவா் வரைந்த மோனலிசா ஓவியம் உலகப் புகழ் பெற்றது. அற்புதமான கலையம்சம் கொண்டது. நான் ஓவியரானால் மோனாலிசாவின் ஓவியத்தையும் வரைந்து பாா்ப்பேன்.

## 79) நான் செய்த பொம்மை

பொம்மைகளைக் கடதாசிகளாலும் செய்யலாம். துணிகளாலும் செய்யலாம். நான் செய்த பொம்மை துணிகளால் ஆனது. பலவா்ண வெட்டுக் கழிவு துணிகளைச் சேர்த்தேன். பட்டு நூலையும் மெல்லிய கம்பிகளையும் மணிகளையும் குண்டூசிகளையும் கடையில் வாங்கினேன். ஆசிரியா் ஆக்கப் பாடத்தில் சொல்லித் தந்தது போல் ஒரு கம்பியொன்றை எடுத்து மொத்தமான தடி ஒன்றில் இறுகக் கட்டி அடிப்பீட மாக்கினேன். இன்னொரு சிறிய கம்பி ஒன்றை எடுத்து வளைத்து கைகளாக்கினேன். பின் கம்பியின் உச்சியிலே துணியைச் சுற்றி தலையாக்கினேன். அதன் பின் கைகளுக்கும் உடம்புக்கும் துணிகளைச் சுற்றி வடிவமைத்தேன். பட்டு நூலையும் குண்டூசிகளையும் பயன்படுத்தி பொம்மையை ஒழுங்கமைத்தேன். பின் பொம்மையின் தலையில் கூந்தலை ஒட்டினேன். அதன் பின் இரண்டு மணிகளை எடுத்து தைத்து கண்களாக்கினேன். பட்டுப்பாவாடையும் ,பட்டுச்சட்டையும் பொம்மைக்குக் கட்டினேன். கைக்குக் காப்பும், கழுத்துக்கு மணிமாலையும் காதுக்கு வளையமும் போட்டேன். அதன் பின் வா்ணப் பொடிகளைக் கரைத்து கண், வாய், மூக்கு, முதலியவற்றை செப்பனிட்டேன். அழகான பொம்மை உருவானது. பெற்றோரும்,ஆசிரியரும், மாணவா்களும் எனது பொம்மையைப் பார்த்து ரசித்தனா். என்னைப் பாராட்டினா்.

## 80) நான் பார்த்த கண்காட்சி

எமது பாடசாலை அமைந்த கல்விக் கோட்டத்தில் ஓா் உபகரணக் கண்காட்சி நடாத்தப்பட்டது. கோட்டத்துக்குட்பட்ட நாற்பது பாடசாலைகள் அக் கண்காட்சியில் பங்கு பற்றின. தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான வகுப்புக்களுக்கு கற்பிக்கக் கூடிய அனைத்து உபகரணங்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. கணித பாடத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல், கணக்குகளை இலகுவாகச் செய்யும் முறைகள் பற்றிய உபகரணங்கள் பல இருந்தன.

ஆரம்ப விஞ்ஞானப் பாடத்தில் மின்சாரம், காந்தம், வேலைகளை இலகுவாக்கும் பொறிகள்,விதைகள் முளைத்தல், மண்ணின் பண்புகள், எம்மைச் சூழவுள்ள வளி, நாம் உணரும் சூடு, எமது இயந்திர சாதனங்கள் பற்றிய பல தகவல்களைத் தரும் உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. சுற்றாடல் பாடத்தில் தாவரங்கள், பிராணிகள், உணவு, போக்குவரத்து போன்றவற்றை விளக்கும் பல உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஆங்கிலம், தமிழ் , உடற்கல்வி ஆகிய பாடங்களிலும் பாடத்திற்கேற்ற பல உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஆசிரியா்களும், மாணவா்களும் பாா்க்க வருவோா் கேட்கும் வினாக்களுக்கு விடையளித்தனா். நன்றாகத் திட்டமிட்டுக் கண்காட்சியை ஒழுங்குபடுத்தியவா்களைப் பாராட்ட வேண்டும்.

## 81) நாங்கள் செய்த சிரமதானம்

தரம் ஐந்து மாணவர்களாகிய நாம் பாடசாலையில் ஒரு நாள் சிரமதானம் செய்தோம். எமது பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இல்லை. அருகில் உள்ள ஒரு பெரிய பாடசாலை மைதானத்தில் தான் நாம் விளையாட்டுப் போட்டியை வைப்பது வழக்கம். எமது பாடசாலைக்கு அருகே சிறியதொரு வெற்றுக்காணி பெரும் பற்றைக் காடாக இருந்தது. அதைத் துப்புரவு செய்து விளையாட்டுப் போட்டியை நடாத்துவதென்று அதிபர் தீர்மானித்தார். அதன் படி காணி உரிமையாளரிடம் அதிபர் அனுமதி கேட்டார். அவரும் சம்மதித்தார். அன்று நாங்கள் எல்லோரும் பிக்கான், மண்வெட்டி, கத்தி, அலவாங்கு ஆகிய ஆயுதங்களுடன் அக்காணியைத் துப்புரவு செய்தோம். எங்கும் ஒரே பற்றைக்காடு. மரங்களை வெட்டி ஒரு கரையில் குவித்தோம். கற்களையும் பொறுக்கிக் குவித்தோம். எங்கும் ஒரே முட்களாக இருந்தது. பெரிய வாழைக் குத்திகளைக் கொண்டு வந்து காணி எங்கும் உருட்டினோம். உடைந்த போத்தல் ஓடுகளைப் பொறுக்கி பெரியதொரு குழி வெட்டி புதைத்தோம். பெரிய மரத்துண்டுகளை காணி உரிமையாளரிடம் கொண்டு சென்று கொடுத்தோம். பற்றைக்குள் இரண்டு பாம்புகள் இருந்தன. ஆசிரியர் அவற்றை அடித்துக் கொன்றார். பாடசாலை அபிவிருத்திச் சபையினர் தேநீரும் வடையும் தந்தனர். சுமார் இரண்டு மணியளவில் வெட்டிக் குவித்த பற்றைகளை தீமூட்டி எரித்தோம். பற்றைக் காடாக இருந்த பிரதேசம் அழகான மைதானமாக உருமாறியது. அதைப்பார்த்து மகிழ்ந்தோம்.

## 82) நான் ஒரு விஞ்ஞானியானால்

நான் ஒரு விஞ்ஞானியானால் புற்று நோய்க்கு மருந்து கண்டு பிடிக்க முயற்சிப்பேன். வருடா வருடம் புற்று நோயால் உலகில் கோடிக்கணக்கான மக்கள் இறக்கின்றார்கள். கோடிக்கணக்கான மக்கள் புற்று நோயால் பீடிக்கப்படுகின்றார்கள். உலகில் பல புதுமைகளைச் செய்யும் விஞ்ஞானிகளால் இது வரையும் புற்று நோய்க்கு மருந்து கண்டு பிடிக்கப்படாதது கவலையான விடயமாகும். எனவே நான் எனது அறிவு முழுவதையும் புற்று நோய்க்கு மருந்தைக் கண்டு பிடிக்கப் பயன்படுத்துவேன். இக்கொடிய நோயில் இருந்து மக்களைக் காப்பதே எனது இலட்சியமாகும். அதற்காக என்னை அர்பணித்துச் செயற்படுவேன். இவ்வாராட்சிக்காக உலக நிறுவனங்களிடம் பண உதவியும், தொழில்நுட்ப உதவியும் கோருவேன். உலகில் உள்ள விஞ்ஞானிகள் பலரையும் எனது ஆராய்ச்சிக்கு உதவுமாறு கோருவேன். அதற்காக சகல நடவடிக்கைகளிலும் முழுமையாக ஈடுபடுவேன். மருந்து கண்டு பிடிக்கும் வரை ஓய்ந்திருக்கமாட்டேன்.

## 83) மலைப் பாம்புப் பட்டம் செய்தது

நான் அழகான தொரு மலைப்பாம்புப் பட்டம் செய்து வானில் பறக்க விட்டேன். பாம்புப் பட்டத்தின் வாய்வழியாகச் சென்ற காற்று வால்வழியாக வெளியேறிக் கொண்டிருந்ததால் பாம்பு பெரிதாகத் தெரிந்தது. காற்றில் அது அசையும் போது, நிலத்தில் வளைந்து வளைந்து செல்வது போலிருந்தது.

அழகிய வா்ணக் கடதாசிகள் பல ஒட்டிச் செய்ததால் பறக்கும் போது அதன் உருவம் அழகாக இருந்தது. பட்டத்தின் தலைப்பகுதியிலும் வால் பகுதியிலும் கட்டியிருந்த பலவா்ணக் குஞ்சங்கள் காற்றில் அசையும் போது அழகாக இருந்தன. நான் செய்து வானத்தில் பறக்க விட்ட பட்டத்தைப் பாா்த்து எனது நண்பா்கள் பாராட்டினாா்கள். காற்று பலமாக வீசும் போது பட்டம் மேலே சென்று ,என்னைப் பலமாக இழுத்தது. காற்றுச் சற்றுக் குறையும் போது பட்டம் சிறிது கீழே இறங்கியது. இழுப்பதும் குறைவாக இருந்தது.

## 84) பரிசளிப்பு விழாவன்று

எனது பாடசாலைப் பரிசளிப்பு விழாவன்று எனக்கு ஆறு பரிசுகள் கிடைத்தன. தமிழ், ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், ஆகிய பாடங்களுக்கு வகுப்பில் நான் தான் பரிசு பெற்றேன். அத்துடன் வகுப்புப் பரிசும் ,பொது அறிவுக்கான முதற் பரிசும் எனக்குக் கிடைத்தது. பரிசளிப்பு விழாவுக்கு வலயக் கல்விப் பணிப்பாளா் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டாா். அவரிடம் நான் பரிசுகள் பெறும் போது மாணவா்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனா். படப்பிடிப்பாளா் நான் பிரதம விருந்தினரிடம் பரிசு பெறுவதைப் படம் பிடித்தாா். பரிசளிப்பு நிகழ்வு முடிவடைந்ததும் பிரதம விருந்தினா் பாடசாலையைப் பற்றியும் ,ஆசிரியா்களது கடமைகளைப் பற்றியும் ,மாணவா்கள் ஒழுக்கமாக வாழ வேண்டிய அவசியம் பற்றியும் பேசினாா். அவா் பேசி முடிந்ததும். கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. கோலாட்ட நடனத்தில் நானும் பங்கேற்று நடனமாடினேன். பல பரிசுகள் பெற்றதாலும் கலைநிகழ்ச்சியில் பங்கேற்றதாலும் பரிசளிப்பு விழாவன்று நான் மிகவும் மகிழ்வுடன் இருந்தேன்.

## 85) சுத்தம் சுகம் தரும்

சுத்தம் சுகம் தரும் என்பது ஆன்றோா் வாக்கு. நாம் பாவிக்கும் உடைகள் ,நாம் உண்ணும் உணவு,நாம் குடிக்கும் நீா், எமது உடல் யாவும் எவ்வேளையிலும் சுத்தமாக இருந்தால் நோய் எமக்கு ஏற்படாது. இவற்றை விட நாம் வசிக்கும் வீடு, வீட்டின் சுற்றுப்புறங்கள்,பாடசாலைகள், நூல்நிலையங்கள், கோவில்கள், போன்றனவும் சுத்தமாக இருத்தல் வேண்டும். உடை, உணவு, நீா், போன்றவை அசுத்தமாக இருந்தால் தோல் வியாதிகள் ,வாந்திபேதி,வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல், போன்ற நோய்கள் ஏற்படும். சுற்றாடல் மாசடைவதால் ஈக்களும் நுளம்புகளும் பெருகும். இதனால் வயிற்றோட்டம் மலேரியா போன்ற கொடிய நோய்கள் எம்மைத் தாக்கும். ‘‘சுத்தம் உள்ள இடமெங்கும் சுகமும் உண்டு, நீ அதனை நித்தம் நித்தம் பேணுவாயேல் நீண்ட ஆயுள் பெறுவாயே’’. என்ற பாடல் சுத்தத்தின் அவசியத்தைச் சொல்கிறது. சுத்தமான உணவு,சுத்தமான நீா், சுத்தமான சுற்றாடல், எமக்குச் சுகத்தைத் தரும். சுத்தத்தைப் பேணி வாழ்ந்தால் நோய் எம்மை அணுகமாட்டாது. நீண்ட காலம் நோயின்றி வாழலாம்.

## 86) நான் சிறுவருக்கான கதை ஒன்றை எழுதி.....

நான் சிறுவருக்கான கதை ஒன்றை எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன். என்ன ஆச்சரியம் அக்கதை ஞாயிறு வார மஞ்சரியில் பிரசுரமாகி இருந்தது. அதைக் கண்டதும் நான் அதிர்ச்சியடைந்தேன். எனது கதை தரமானது என்பதை நினைக்க மகிழ்ச்சியாக இருந்தது. அக்கதையை அப்பாவும் அம்மாவும் வாசித்து விட்டு என்னைப் பாராட்டினார்கள். நண்பர்களும் அயலவர்களும் வீடு தேடி வந்து என்னைப் பாராட்டினார்கள். மறு நாள் பாடசாலைக்குச் சென்றபோது என்னுடன் படிக்கும் சக மாணவர்கள் என்னைப் பாராட்டினார்கள். வகுப்பாசிரியரும் ஏனைய ஆசிரியர்களும் என்னைப் பாராட்டினர். அன்று பாடசாலையில் நடைபெற்ற காலைக் கூட்டத்தில் அதிபர் என்னைப் பாராட்டினார். ''இப்படி எல்லா மாணவர்களும் தமது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும். என்று கூறினார். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அதிபர் காலைக் கூட்டத்தில் எனக்குப் பரிசு ஒன்றைத் தந்தார். மாணவர்கள் எல்லோரும் கைதட்டி ஆராவாரித்தனர். அப்பாவும் பேனா ஒன்று பரிசாகத் தந்தார்.

## 87) இடியுடன் கூடிய பெருமழை பெய்யுமென வானிலை அவதான நிலையம் அறிவித்தது

இடியுடன் கூடிய பெரு மழை இன்று இரவு பெய்யுமென மாலை ஆறு மணிக்கு வானிலை அவதான நிலையம் வானொலி மூலமும் தொலைக்காட்ச்சி மூலமும் அறிவித்தது. அச் செய்தியைக் கேட்டவுடன் நாங்கள் சில பணிகளைச் செய்தோம். முற்றத்தில் காய்ந்து கொண்டிருந்த விறகுகளை எடுத்துச் சென்று மழை படாத இடத்தில் வைத்தோம். அப்பா வெளியே கட்டியிருந்த மாட்டை அவிழ்த்து உள்ளே கட்டினார். நானும் அக்காவும் யன்னல் கதவுகளைச் சாத்தினோம். அண்ணா மின் உபகரணங்களில் தொடுக்கப்பட்ட மின் இணைப்புக்களைக் கழற்றினார். வெளியே உலர்வதற்காக போடப்பட்டிருந்த உடுப்புக்களை எடுத்து நான் உள்ளே வைத்தேன். எமது வீட்டில் வெள்ளம் தேங்குவது வழக்கம் .அதனால் வெள்ளம் வழிந்தோடும் வாய்க்கால் பகுதிகளை அப்பா துப்புரவு செய்தார். இப்படிப் பெரு மழை ஒன்றை எதிர்பார்த்து முன்னேற்பாடாக வீட்டார் எல்லோரும் சேர்ந்து வேலைகள் பலவற்றைச் செய்தோம்.

## 88) நான் தான் சமதானப் புறா

நான் தான் சமாதானப் புறா உலகெங்கிலுமுள்ள மக்கள் என்னைச் சமாதானத்தின் சின்னமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனால் ஊர்வலங்கள், கூட்டங்கள் நடக்கும் போது என்னைப் பெரிய படமாக கீறி முன்னே கொண்டு செல்வார்கள். சில கூட்டங்களில் சமாதானம் வேண்டி என்னைப் பறக்க விடுவார்கள். நாட்டுக்குத் தேவை சமாதானம். ஓர் நாட்டில் எல்லா வசதிகளும் இருந்தும் அங்கு வாழும் மக்களிடையே ஒற்றுமையில்லா விட்டால் பெருங்கேடுகள் நிகழும். நான் சமாதானப் புறாவாகையால் உங்களுக்கு

என்னாலான சேவையைச் செய்வேன். எப்பொழுதும் ஒற்றுமையாக இருங்கள் உங்கள் நாட்டில் வாழும் ஏனைய இன மக்களை மதியுங்கள். அவர்களின் உரிமைகளில் தலையிடாதீர்கள். பெரியவர்கள் கூறியது போல் வாழுங்கள் பிரச்சினைகளை வன்முறைகளால் தீர்க்க முடியாது என்பதை நினைவில் வைத்திருங்கள்.நான் கூறியபடி நடந்தால் சமாதானம் ஏற்படும். அதனால் தான் இவற்றை நான் உங்களுக்குக் கூறுகிறேன்.

## 89) பூனையைக் கண்ட எலியாகிய நான்

பதுங்கிப் பதுங்கி என்னைப் பிடிப்பதற்காக வந்த பூனையைக் கண்ட எலியாகிய நான் பயத்தால் துள்ளி ஓடினேன். பூனை என்னைத் துரத்தியது. நான் வேகமாக ஓடினேன். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. என்னைப் பிடித்தால் அது உடனே என்னைக் கொண்று தின்னாது. சித்திரைவதை செய்து விளையாடும் என்பதை நினைக்க எனக்குப் பயமாக இருந்தது. ஒரு வாரத்திற்கு முன்பு தான் நான் ஏழு குட்டிகளை ஈன்றிருந்தேன். எனது அன்புச் செல்வங்களின் முகங்கள் ஒரு கணம் என் கண்களுக்குள் தெரிந்தன. பிள்ளையாரை மனதார வேண்டிக் கொண்டு விரைவாக ஓடினேன். பூனை ஓடுவது கேட்க மாட்டாது. அதனால் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினேன். நம்பிக்கையை நான் இழக்கவில்லை. எதிரே ஒரு கற்குவியல் இருந்தது. அதற்குள் புகுந்து மறைந்து கொண்டேன்.

## 90) நான் ஒரு காட்டூன் படம் வரைந்து

நான் ஒரு காட்டூன் படம் வரைந்து ஆசிரியரிடம் காட்டினேன். ‘‘மிகவும் நன்றாக இருக்கின்றது’’ என்று சொன்னார். பின் மாணவர்கள் எல்லோரையும் அழைத்து நான் வரைந்த காட்டூன் படத்தை அவர்களுக்குக் காட்டினார். குரங்குகள் சில மரத்தில் விளையாடுவதாக நான் வரைந்த காட்டூன் படம் மிகவும் அழகாக இருப்பதாக ஆசிரியர் கூறியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. பின் என்னையும் அழைத்துக் கொண்டு அதிபரின் அறைக்குச் சென்றார். அதிபர் நான் வரைந்த காட்டூன் படத்தை வெகு நேரமாக பார்த்தார். ‘‘பின் நன்றாக வரைந்திருக்கிறீர்’’ என்று பாராட்டினார். அதிபரது பாராட்டு எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அதைப்பற்றி வீட்டில் கூறினேன். அப்பா என்னைப் பாராட்டிப் பரிசு ஒன்றும் தந்தார்.

## 91) நீர் எப்படி விடுமுறையைக் கழித்தீர் என்பதைப் பற்றி உமது நண்பருக்குக் கடிதம் எழுதுக

வா.டிவாகர்,<br>கிழுவானை விதி,

கோப்பாய் மத்தி,
24.07.2004

அன்பான அருணன்,

நீண்ட நாட்களாக நான் உனக்கு கடிதம் எழுதவில்லை. காரணம் நான் விடுமுறையின் போது கண்டிக்குச் சென்றிருந்தேன். அங்கே எனது உறவினர் ஒருவர் இருக்கின்றார். முதலில் தலதாமாளிகைக்குச் சென்றோம். அங்கு மிகவும் அழகான புத்தர் சிலைகள் பல இருந்தன. நான் சுற்றாடல் பாடத்தில் கற்ற பல விடயங்களை நேரில் பார்க்க முடிந்தது. உயர்ந்த கோபுரங்களும் ,அதில் வரையப்பட்ட ஓவியங்களும் மனதைக் கொள்ளை கொண்டன. ஏரானமான பௌத்த மக்கள் அங்கு வந்து தீபம் ஏற்றி வணங்கினர். தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட அவ் ஆலயத்தைப் பார்க்க மிகவும் அழகாக இருந்தது.

அடுத்த நாள் பேராதனைப் பூங்காவைச் சென்று பார்வையிட்டோம். மிகவும் அழகான,நான் இதுவரை காணாத பல பூக்களைக் கண்டு ரசித்தேன். பல வகையான மீன்கள் தொட்டிக்குள் நீந்தி விளையாடின. அவற்றைப் பார்க்க ஆசையாக இருந்தது. பின் கண்டி நகரைச் சற்றிப் பார்த்தோம். உயர்ந்த மலைச் சிகரங்களில் மட்டமாக வெட்டப்பட்ட தேயிலைச் செடிகள் மனதைக் கவர்ந்தன. இரவில் மிகவும் குளிராகவும், பகலில் வெப்பமின்றியும் இருந்த காலநிலை என்னை மிகவும் கவர்ந்தது.

பின் கொழும்புக்கு வந்தோம். அங்குள்ள பூங்காக்கள், கோயில்கள், புகையிரத நிலையங்கள்,சுப்பமாக்கற் போன்றவற்றைப் பார்த்தோம். மிருகக் காட்சிச்சாலைக்கும் மியூசியத்திற்கும் சென்றோம். விடுமுறை நாட்கள் மிகவும் பயனுள்ள வகையில் கழிந்ததையிட்டு எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

இப்படிக்கு,
அன்புள்ள நண்பன்,
வா.டிவாகர்.

## 92) நான் கனவு கண்டு பயந்து.....

நான் கனவு கண்டு பயந்து அலறியபடி எழுந்தேன். எல்லா இடமும் இருட்டாக இருந்தது. எனது உடல் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. உடல் வியர்வையால் நனைந்திருந்தது. நான் அலறிய சத்தம் கேட்டு அப்பா எழுந்து லைட்டைப் போட்ட பின்பும் எனக்குப் பயமாக இருந்தது. 'பயப்படாதே'… என்று சொல்லிய அப்பா சாமி அறைக்கச் சென்று திருநீறு கொண்டு வந்த எனது நெற்றியில் பூசினார். அதன் பின் எனக்குப் பயம் சற்றுக் குறைந்தது. எனது உடல் வியத்திருப்பதைக் கண்ட அப்பா துவாயால் துடைத்தார். பின் மட்டை ஒன்றை எடுத்து வந்து விசுக்கினார். காற்று உடல் மீது பட இதமாக இருந்தது. பின் நான் அப்பாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு படுத்தேன்.

## 93) பாடசாலைத் தோட்டத்தைச் சென்று பார்த்த போது……

அன்று நல்ல மழை. மழை விட்டதும் நாங்கள் பாடசாலைத் தோட்டத்தைச் சென்று பார்த்தபோது நாம் நட்டிருந்த காய்கறிச் செடிகள் எல்லாம் சரிந்திருந்தன. வாய்க்கால் ஊடாகப் பாய்ந்த வெள்ளம் மண்ணை அரித்துச் சென்றதால் தான் செடிகள் சரிந்ததாக ஆசிரியர் கூறினார். அத்துடன் வெளியே பெய்யும் மழை நீா உள்ளே வராமல் தோட்டத்தைச் சுற்றி வரம்பு கட்டுமாறு சொன்னார். நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து வரம்பு கட்டினோம். சரிந்திருந்த செடிகளை மண்போட்டு நிமிர்த்தினோம். பூக்களுடனும் ,காய்களுடனும் நின்ற செடிகளை நிமிர்த்தும் போது காய்களும் ,பூக்களும் உதிர்ந்தன. இன்னொரு முறை மழை பெய்யும் போது மண்ணரிப்பு நிகழா வண்ணம் தடுப்பு நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டோம்.

## 94) நான் நண்பர்களுடன் சென்று….

நான் நண்பர்களுடன் சென்று கடற்கரையைப் பார்த்தேன். நாங்கள் சென்ற நேரம் மாலை நேரமாகும். கடற்கரையில் ஏராளமான மக்கள் சுத்தமான காற்றைச் சுவாசிப்பதற்காக வந்திருந்தனர். தூரத்தே கடலுக்கு சிறிது மேலாகச் சூரியன் பெரிய தொரு வட்டத் தட்டுப் போலத் தெரிந்தான். கடலில் ஏராளமான மீன் பிடி வள்ளங்கள் சென்று கொண்டிருந்தன. அவற்றைப் பார்க்க மிகவும் அழகாக இருந்தன. தூரத்தே ஒரு பெரிய கப்பல் நங்கூரமிட்டிருப்பது தெரிந்தது. கடற்கரையோரத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். கடல் அலைகள் காலில் வந்து அடித்து நுரைத்தன. இருட்டாகுமுன்பு நாங்கள் கடற்கரையில் இருந்து புறப்பட்டோம்.

## 95) கணனியின் வருகையால் மனிதன் அடைந்த நன்மைகள் பற்றி எழுதுக

மனிதனது தேவைகளை உணர்ந்து உடனுக்குடன் நிறைவேற்றி வைப்பது கணனியாகும். இன்றைய நவீன உலகில் கணனியால் செய்ய முடியாத செயல்கள் எதுவுமே இல்லை என்று கூறலாம். கல்வித் துறையில், மருத்துவத்துறையில், வானியல்துறையில் பல சாதனைகளைச் செய்துள்ளது. ஆசிரியராகி மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கின்றது. மருத்துவராகிய மக்களுக்கு வைத்தியம் செய்கின்றது. வானில் பறக்கும்விமானங்களைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. பரீட்சைப் பெறுபேறுகள் துரிதமாக வெளிவர உதவி செய்கின்றது. படங்கள் வரைந்து கொடுக்கின்றது. வினாத்தாள்களை துரிதகதியில் தயாரித்துக் கொடுக்கின்றது. இப்படிக் கணனியால் மனிதன் அடைந்த பலன்கள் பலவாகும்.

## 96) நான்பூங்காவுக்குச் சென்றபோது.....

நான் எனது பெற்றோர்களுடன் நகரில் உள்ள பிரபல்யம் வாய்ந்த பூங்காவிற்குச் சென்ற போது அங்கு நான் கண்ட சம்பவத்தை இன்னும் என்னால் மறக்க முடியாமல் இருக்கின்றது. கிட்டத்தட்ட எனது வயதை ஒத்த சிறுவன் ஒருவன் அம்மா பிச்சை ,ஐயா பிச்சை போடுங்கள் என பூங்காவிற்குச் சென்று கொண்டிருந்த அனைவரையும் தடவித்தடவிக் கெஞ்சி மன்றாடியதை எவருமே பொருட்படுத்த வில்லை.எனக்கு அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. எனது தந்தையிடம் இருபது ரூபாய்த் தாளை வாங்கி அவனிடம் கொடுத்தேன். அவன் மிகவும் சந்தோஷமடைந்து புன்சிரிப்பை வெளிக்காட்டினான். எனக்கும் கூட மகிழ்ச்சியாக இருந்தது. பின்பு நாம் பூங்காவினுள் சென்று அங்குள் அலங்கார வளைவுகள், பூம் பந்தல்கள், சிறுவர் விளையாட்டிடங்கள் என்பவற்றைப் பார்வையிட்டும் விளையாடியும் மகிழ்ந்தோம்.

## 97) வீதியில் நடந்த விபத்தைக் கண்டு.....

நான் சனிக்கிழமை கடைக்குச் சென்று கொண்டிருந்த போது பிரதான வீதியால் வந்த முதியவர் ஒருவர் அவசரமாக விதியைக் குறுக்காகக் கடந்தார். எதிரே வந்த மோட்டார் வண்டியொன்று அவரை மோதியது. வீதியில் திடீரென நிகழ்ந்த விபத்தைக் கண்டு நான் பயந்து போனேன். சில நிமிடங்கள் என்னால் அவ் அதிர்ச்சியில் இருந்து விடுபட முடியவில்லை. வீதியால் சென்ற மக்கள் விபத்துக்குள்ளான அந்த முதியவருக்கு முதலுதவி செய்தனர். பின் மெதுவாகத் தூக்கி வீதியால் வந்த வாகனம் ஒன்றை மறித்து அதில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். வாகனத்தில் ஏற்றும் பொது அவர் சயநினைவை இழந்திருந்தார். பாதசாரிகள் வீதி கடக்கும் முறையை அனுசரித்துக் கடத்தல் வேண்டும். அவர் வீதி கடக்கும் முறைப்படி வீதியைக் கடக்காதமையால் தான் அவ்விபத்து நடந்தது.

## 98) நான் முதியவரைச் சந்தித்து

நான் கோயிலுக்குச் சென்ற போது அங்கு முதியவரைச் சந்தித்து உரையாடினேன். நெற்றியில் வீபூதி பூசி, சந்தனம் ஒரு பொட்டும் வைத்திருந்த அவரைப்பார்க்க அழகாக இருந்தது. அவருக்கு அருகில் சென்று ‘‘தாத்தா உங்கள் பெயர் என்ன?’’என்று கேட்டேன். ‘‘சம்பந்தன்’’ என்று அவர் சொன்னார். கோயிலைப் பற்றியும், வழிபடும் முறைகளைப் பற்றியும் எனக்குச் சொன்னார். திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட கதை உமக்குத் தெரியுமா, என்று கேட்டார். நான் ‘‘ஆம்’’ என்று சொன்னேன். ‘‘எத்தனையாம் வகுப்புப் படிக்கிறீர்?’’ என்று கேட்டார். ‘‘நான் தரம் ஐந்து’’ என்று சொன்னேன்.’’இம்முறை புலமைப் பரிசில் பரீடசை எடுக்கிறீர் கவனமாகப் படித்துப் பாஸ் பண்ணும்’’ என்றார். அத்துடன் பயனுள்ள பல கதைகளைச் சொன்னார். கல்வியின்

முக்கியத்துவத்தைப் பற்றிச் சொன்னார். அவரைச் சந்தித்து உரையாடியது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

## 99) அன்று நல்லூர்க் கந்த சுவாமி கோயில் தேர்த் திருவிழா அதிகாலை ஆறு மணி தொடக்கம் இலங்கை வானொலி தேர்த்திருவிழாவை அஞ்சலி செய்தது. காலை எட்டு மணிக்கு வானதி வானொலியை இயக்கினாள் "முருகப் பெருமான் வள்ளி தெய்வானையுடன் தேரில் ஏறி அமர்ந்திருக்கிறார்..." தொடர்ந்து ஏழு வசனங்கள் எழுதுக.

குருக்கள் பஞ்சாராத்தி காட்டுகிறார். மக்கள் அரோகரா எனக் கோசம் எழுப்புகின்றனர். பக்திப் பரவசத்துடன் அவர்கள் எழுப்பும் கோசம் விண்ணை அதிரவைக்கிறது. பார்க்குமிடமெல்லாம் மக்கள் வெள்ளம் போல் நிறைந்திருக்கின்றனர். தேரின் முன்னால் மலை போலக் குவிந்திருந்த தேங்காய்களைப் பக்தர்கள் எடுத்து அடிக்கிறார்கள். ஆயிரக்கணக்கான தேங்காய்களை அடித்து முடிக்க வெகு நேரம் எடுக்கிறது. தங்கரதத்தில் வீற்றிருக்கும் முருகப் பெருமானையும் வள்ளி தெய்வானையையும் பார்க்கப் பார்க்க பரவசம் மிகுந்து வருகிறது. சூரரை அழித்துத் தேவரைக் காத்த முருகப்பெருமானின் தங்கரதம் மெதுவாக அசைய ஆரம்பிக்கிறது. தேரின் பின்னால் பல்லாயிரம் மக்கள் திரண்டு நின்று முருகனின் நாம வாளியைச் சொல்லிப் பரவசப்படுகின்றனர். மக்கள் மிக மிக நெருங்கி இடைவெளியின்றி நிற்பதால் தேர் உருளுகிறதா இல்லை மக்கள் அதனைத் தூக்கிச் செல்கின்றனரா என்று எண்ணத் தோன்றுகிறது.

## 100) எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம். இது ஆறுமுக நாவலரால் 1872 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனது பாடசாலையில் அறுநூறு மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இருபத்தைந்து ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கிறார்கள். எமது பாடசாலையில் சகல வசதிகளும் உள்ளன. இங்கு தரம் ஒன்றில் இருந்து தரம் ஒன்பது வரை வகுப்புக்கள் உள்ளன. எமது அதிபரின் பெயர் திரு கே.வி. குணசேகரம். எமது பாடசாலை கோப்பாய்த் தொகுதியில் அமைந்துள்ள ஒரு பிரசித்தி பெற்ற பாடசாலை ஆகும். ஆசிரியர்கள் அக்கறையுடன் கற்பிப்பதால் நாம் மாவட்ட, மாகாண ரீதியாகப் பல பரிசுகளைப் பெற்றுள்ளோம். எமது பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இருக்கவில்லை. அண்மையில் அதிபரது முயற்சியால் பல இலட்சம் ரூபாய் செலவில் விளையாட்டு மைதானம் ஒன்றை வாங்கியுள்ளோம். எமது பாடசாலையின் பழைய மாணவரான பேராசிரியர் க. சூரியகுமாரனின் நிரந்தர வைப்பு நிதி மூலம் கிடைக்கும் வட்டிப் பணத்திலிருந்து வருடா வருடம் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெறுகின்றது.

## ஒரு பொருள் பன்மொழி

பல சொற்கள் தமிழ் மொழியில் ஒரு கருத்தை உணர்த்தி நிற்கின்றன. அவ்வாறான சொற்கள் சிலவற்றை நாம் அறிந்து கொள்வோம். இவற்றை ஒத்த சொற்கள் என்றும் சொல்லாம்.

1) இரத்தம், குருதி,உதிரம்,செந்நீர்

2) ஈகை, கொடை , தானம்

3) உண்மை, சத்தியம்,வாய்மை, மெய்

4) ஊன்,உணவு, உண்டி, ஆகாரம்

5) வயல், கழனி, பண்ணை, புலம்

6) பூ ,மலர், புஷ்பம்

7) யானை ,கரி,ஆனை, குஞ்சரம், வேழம்

8) குழந்தை ,குழவி, சேய், பிள்ளை, மகவு

9) சிநேகம், நட்பு, கேண்மை, தோழமை

10) குதிரை, பரி,புரவி, மா, அசுவம்

11) பாம்பு, அரவம், பண், கட்செவி

12) நூல்,புத்தகம்,ஏடு,பனுவல்

13) மேகம், கொண்டல், கார்,முகில்

14) மனைவி, இல்லாள், துணைவி, இல்லத்தலைவி

15) வேற்றுமை, பேதம், மாற்றம், வேறுபாடு,திரிபு

16) ஊறு, இடையூறு, துன்பம், தீமை

17) சோலை, பொழில், கா

18) சூரியன், பகலவன், தினகரன், ஞாயிறு, கதிரவன்

19) அரசன், மன்னன், வேந்தன், கொற்றவன்

20) நகை, இழை, ஆரம்,அணி

21) உடல், உடம்பு, சரீரம், மேனி

22) ஒலி, ஓசை, அரவம், தொனி

23) ஒளி, வெளிச்சம், சுடர், கதிர், சோதி

24) கணவன், தலைவன், துணைவன், இல்லத்தலைவன், நாயகன், பதி

25) காடு, அடவி, கானம், வானம், ஆரணியம்

26) குற்றம், பிழை, தவறு, மறு, களங்கம், மாசு

27) சந்திரன், நிலவு, திங்கள், மதி, அம்புலி

28) இறத்தல், மடிதல், மரணம், சாவு, காலமாதல்

29) தந்தை, தகப்பன், பிதா, அப்பன், தாதை

30) தாய், அன்னை, மாதா

31) நித்திரை, உறக்கம், தூக்கம், துயில்

32) நெருப்பு, தீ, அக்கினி, அனல், அழல்

33) செய்யுள், பா, கவி, பாடல்

34) போர், யுத்தம், சண்டை, சமர்

35) பூமி, வையகம், உலகம், புவி, பார், குவலயம், அகிலம்

36) வானம், ஆகாயம், விசும்பு, விண், வான்

## பலபொருள் ஒரு மொழி

1) அடி :பாதம், பன்னிரண்டு அங்குலம் கொண்ட அளவு, அடிக்குமாறு ஏவுதல், கீழே, செய்யுள் வரி.

2) அணை : அணைத்தல், அணைக்கட்டு, மெத்தை, வரம்பு, முட்டு

3) அமர் : போர், உக்கிரம், மதில், அமருமாறு ஏவுதல்

4) அரன் : மதில், கோட்டை, காவல், அழகு, மலை, காடு, கடல்

5) அரவம் : ஒலி, பாம்பு, சிலம்பு

6) அரை : இடை, பாதி, அரைக்குமாறு ஏவுதல்

7) அளி : அன்பு, வண்டு, மது, தேன், கொடு

8) அறுகு: ஒருவகைப்புல், சிங்கம், யானை

9) ஆரம் : ஆபரணம், மாலை, முத்து

10) உடு : விண்மீன், அகழி, அம்பு, ஆடு

11) ஊறு : இடையூறு, தீமை, ஊறுதல்

12) கண்டம் : கழுத்து,வான், துண்டம், பெருநிலப்பரப்பு

13) கரை : ஓரம், முடிவு, எல்லை, கரைக்குமாறு ஏவுதல்

14) தலை : தலைமை, ஆதி, ஆகாயம், முதல், சிரசு

15) திரு : செல்வம், இலக்குமி, அழகு

16) மதி : கணித்தல், மரியாதைசெய், சந்திரன், அறிவு

17) விளக்கு : விளங்கவை, சுத்தம்செய், தீபம், துலக்கு

18) படி : படி, கீழ்படி, என்னும்ஏவல், அளக்குங்கருவி, வாயிற்படி

19) பத்திரம் : உறுதி, இலை, கடிதம், கவளம்

### ஒத்த கருத்துள்ள சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அகம் | - | மனம் | அழைத்தல் | - | கூப்பிடுதல் |
| அகந்தை | - | செருக்கு | அச்சுறுத்தல் | - | பயமுறுத்தல் |
| அச்சம் | - | பயம் | அஞ்சலி | - | வணக்கம் |
| அடவி | - | காடு | அற்புதம் | - | அதிசயம் |
| அடுக்களை | - | சமையலறை | ஆராதனை | - | வழிபாடு |
| அண்மை | - | அருகில் | ஆசிரியா் | - | குரு |
| அலங்கோலம் | - | ஒழுங்கின்மை | ஆசனம் | - | இருக்கை |
| அமைதி | - | அடக்கம் | ஆடை | - | உடை |

அரசன் - வேந்தன்
அரவம் - பாம்பு
அவதானம் - நிதானம்
அவனி - பூமி
அவதி - துன்பம்
அழகு - எழில்
அறிவுரை - புத்திமதி
அரசன் - மன்னன்
அம்மா - தாய்
அருவி - ஆறு
அகம் - உள்ளம்
அபாயம் - ஆபத்து
அற்புதம் - புதுமை
அப்பா - தந்தை
அஞ்சுதல் - பயப்படுதல்
அயலில் - பக்கத்தில்
அம்பு - பாணம்
அன்பு - கருணை
அமர்தல் - இருத்தல்
ஈடேற்றம் - உய்வு
ஈயார் - கொடாதவர்
ஈகை - கொடை
உதாசீனம் - அலட்சியம்
உபதேசம் - போதனை
உண்டி - உணவு
உயர்வு - மேன்மை
உற்சாகம் - சுறுசுறுப்பு
உறுப்பு - அங்கம்
உத்தரீயம் - சால்வை
உறுமால் - தலைப்பாகை
உறவினர் - இனத்தவர்
உழவர் - விவசாயி
உடம்பு - உடல்
ஊதாரி - செலவாளி
ஊதியம் - சம்பளம், கூலி
எண்ணம் - நினைப்பு, ஞாபகம்
ஏர் - கலப்பை
ஏழை - வறியவர்
ஐயம் - சந்தேகம்
ஒளி - வெளிச்சம்
ஒலி - ஓசை
ஒழி - மறைதல்
ஒத்துழைப்பு - இனங்கி நடத்தல்
ஒப்பந்தம் - உடன்படிக்கை
ஓதுதல் - படித்தல்

ஆவி - உயிர்
ஆகாயம் - வானம்
ஆபரணம் - நகை
ஆணை - கட்டளை
இரை - உணவு
இணங்கல் - சம்மதித்தல்
இறைவன் - கடவுள்
இரதம் - தேர்
இகழ்ச்சி - நிந்தை
இறுதி - முடிவு
இழப்பு - நட்டம்
இறப்பு - சாவு
இல்லறம் - குடும்பம்
இரத்தம் - குருதி
இணங்கல் - ஒத்துப்போதல்
இணைதல் - சேர்தல்
இலாபம் - நயம்
இடர் - துன்பம்
இடிபாடு - சிதைவு
சிந்தனை- யோசனை
நண்பர் - சினேகிதர், தோழர்
சினம் - கோபம்
கள்வன் - திருடன்
பகைவன் - எதிரி
உறக்கம் - நித்திரை
தெரு - வீதி
கை - கரம்
மகிழ்ச்சி – சந்தோஷம்
தினம் - நாள்
புனிதம் - தூய்மை
மனை - வீடு
கழனி - வயல்
களங்கம் - குற்றம்
குறிக்கோள் - நோக்கம்
கோரிக்கை - வேண்டுகோள்
சத்தியம் - உண்மை
சொத்து - உடைமை
வேடிக்கை - விநோதம்
கடமை - பணி
பணியகம் - செயலகம்
தியாகம் - அர்ப்பணம்
வேற்றுமை - வித்தியாசம்
பாகுபாடு - பேதம்
திறமை - வல்லமை
சுவை - ருசி

ஔடதம் - மருந்து
விருப்பம் - ஆசை, பிரியம்
வறுமை - மிடி
தூய்மை - சுத்தம்
துன்பம் - வேதனை
சில்லு - சக்கரம்
அன்பளிப்பு – நன்கொடை
கவலை - துயரம்
புலமை - அறிவு

தெய்வம் - இறைவன்
முடிவு - இறுதி
தொடக்கம் - ஆரம்பம்
மரணம் - இறப்பு
மண்றாட்டம் - கெஞ்சுதல்
மாற்றான் - பகைவன்
நாளிதழ் - தினசரி
துன்பம் - அல்லல்
வியாபாரம்-வாணிபம்,வர்த்தகம்

**எதிர்க்கருத்துச் சொற்கள்**

உறவு - பகை
ஆண்டான் - அடிமை
சிரிப்பு - அழுகை
இன்பம் - துன்பம்
நன்மை - தீமை
மேடு - பள்ளம்
தோல்வி - வெற்றி
மலை - மடு
நட்டம் - இலாபம்
பிறப்பு - இறப்பு
ஆரவாரம் - அமைதி
நியாயம் - அநியாயம்
கீர்த்தி - அபகீர்த்தி
தந்திரம் - அவதந்திரம்
புகழ்ந்து - இகழ்ந்து
ஏறு - இறங்கு
செல்வன் - ஏழை
ஏற்றம் - இறக்கம்
வினா - விடை
ஆக்கம் - அழிவு
இளமை - முதுமை
ஒற்றுமை - வேற்றுமை
பெருமை - சிறுமை
மூடன் - அறிவாளி
மென்மை - கடினம்
முற்பகல் - பிற்பகல்
நாகரிகம் - அநாகரிகம்

விழிப்பு - உறக்கம்
தொடக்கம் - முடிவு
மகிழ்ச்சி - கவலை
நன்று - தீது
வீரன் - கோழை
விருப்பு - வெறுப்பு
வாங்குதல் - விற்றல்
சிறிது - பெரிது
இரவு - பகல்
இருள் - வெளிச்சம்
கேள்வி - பதில்
நிதி - அநீதி
நம்பிக்கை – அவநம்பிக்கை
மரியாதை - அவமரியாதை
போற்றுதல் - தூற்றுதல்
வாதி - பிரதிவாதி
அகம் - புறம்
நட்பு - பகை
காலை - மாலை
இயற்கை - செயற்கை
உறக்கம் - விழிப்பு
வா - போ
மடமை – புலமை
வரட்சி - செழிப்பு
நிறை - குறை
உண்டு - இல்லை
வாழ்க - ஒழிக

உற்சாகம் - சோம்பல்
புதுமை - பழமை
இடது - வலது
வரவு - செலவு
உதயம் - அஸ்தமனம்
தேய் - வளர்
ஆதி - அந்தம்
ஒன்ற - பல
குற்றவாளி – சுற்றவாளி
இன்சொல் - வன்சொல்
மறதி - ஞாபகம்
பாவம் - புண்ணியம்
அந்தரங்கம் - பகிரங்கம்
சாதகம் - பாதகம்
அசல் - போலி
இணக்கம் - பிணக்கம்
உறவு - பகை
பாவம் - புண்ணியம்
தெளிவு – மயக்கம்
சமீபம் - தூரம்

நல்லவர் - கெட்டவர்
பௌர்ணமி - அமாவாசை
உள்ளே - வெளியே
உருவம் - அருவம்
இம்மை - மறுமை
தாமதம் - விரைவு
ஒருமை – பன்மை
வெண்மை – கருமை
வாடி - மலர்ந்து
சண்டை – சமாதானம்
குறுகிய – நீண்ட
இரகசியம் - பரகசியம்
இணை – பிரி
மெய் - பொய்
ஆண்மை – பெண்மை
கடினம் - இலகு
வாழ்வு – தாழ்வு
தேடுதல் - அழித்தல்
ஆவேசம் - சாந்தம்

**ஆண்பால் பெண்பால்**

அடியான் - அடியாள்
அரசன் - அரசி
அவன் - அவள்
இந்திரன் - இந்திராணி
ஈசுவரன் - ஈசுவரி
உழவன் - உழத்தி
ஊமையன் - ஊமைச்சி
ஒருவன் - ஒருத்தி
கள்ளன் - கள்ளி
காதலன் - காதலி
கிழவன் - கிழவி
குட்டையன் - குட்டைச்சி
குயவன் - குயத்தி
குறவன் - குறத்தி
சகோதரன் - சகோதரி
சிறியவன் - சிறியவள்
செல்வன் - செல்வி

அப்பன் - அம்மை
அழகன் - அழகி
ஆசிரியன் - ஆசிரியை
இடையன் - இடைச்சி
உத்தமன் - உத்தமி
உபாத்தியாயன் - உபாத்தியாயினி
எசமான் - எசமானி
கணவன் - மனைவி
கடைக்காரன் - கடைக்காரி
காவல்காரன் - காவல்காரி
கிறுக்கன் - கிறுக்கி
குணவான் - குணவதி
குருடன் - குருடி
கெட்டிக்காரன் - கெட்டிக்காரி
சிவன் - சக்தி
சீமான் - சீமாட்டி
செவிடன் - செவிடி

சேவகன் - சேவகி
தாத்தா - பாட்டி
திருவாளன் - திருவாட்டி
தேவன் - தேவி
நல்லவன் - நல்லவள்
பண்டிதன் - பண்டிதை
பாக்கியவான் - பாக்கியவதி
பிராமணன் - பிராமணத்தி
புண்ணியவான் - புண்ணியவதி
பெருமான் - பெருமாட்டி
பைத்தியக்காரன் - பைத்தியக்காரி
மணமகன் - மணமகள்
மறவன் - மறத்தி
மடையன் - மடைச்சி
மாணாக்கன் - மாணாக்கி
முதல்வன் - முதல்வி
முதியவன் - முதியவள்
மூத்தவன் - மூத்தவள்
வஞ்சகன் - வஞ்சகி
வீரன் - வீராங்கனை

தலைவன் - தலைவி
திருமகன் - திருமகள்
தீயவன் - தியவள்
துணைவன் - துணைவி
நாயகன் - நாயகி
பாட்டன் - பாட்டி
பிச்சைக்காரன் - பிச்சைக்காரி
புதல்வன் - புதல்வி
பெரியவன் - பெரியவள்
பேரன் - பேத்தி
பௌத்திரன் - பௌத்திரி
மருமகன் - மருமகள்
மருத்துவன் - மருத்துவிச்சி
மாணவன் - மாணவி
மாமா – மாமி
முடவன் - முடத்தி
மூதாளன் - மூதாட்டி
மைத்துனன் - மைத்துனி
வீட்டுக்காரன் - வீட்டுக்காரி
வேடுவன் - வேடுவிச்சி

**ஆண்- பெண் மரபு**

| **உயிரினம்** | **ஆண்** | **பெண்** |
|---|---|---|
| ஆடு | தகர், கடா | மறி |
| எருமை | கடா | நாகு, பிடேரி |
| குதிரை | குண்டு | வடவை, பெட்டை |
| குரங்கு | கடுவன், திம்மன் | மந்தி |
| கோழி | சேவல் | பேடு, அளகு |
| நண்டு | அலவன் | பெடை |
| நாய் | கடுவன் | பெட்டை |
| பன்றி | கேழல் | பிணா |
| புலி | கேழல் | பிணா |
| பூனை | கடுவன் | பெட்டை |
| மயில் | போத்து | அளகு |
| மாடு | ஏறு, காளை, எருது | நாகு , பசு |
| மான் | கலை | பிணை |
| யானை | களிறு | பிடி |
| பறவைகள் | சேவல் | பெடை, பேடு |

## இளமைப் பெயர்கள்

அணில் - குஞ்சு, குட்டி, பறழ், பிள்ளை
ஆடு - குட்டி
எருமை – கன்று
எலி - குஞ்சு, குட்டி
கரடி - குட்டி, குடாவடி
காகம் - குஞ்சு, பிள்ளை, பார்ப்பு
கிளி - குஞ்சு, பிள்ளை, பார்ப்பு
சிங்கம் - குட்டி, குருளை, பறழ்
கீரி - பிள்ளை , குட்டி
குதிரை- குட்டி
குரங்கு – குட்டி, பறழ்
கோழி - குஞ்சு
தவளை – குஞ்சு , பேத்தை
தென்னை – கன்று , பிள்ளை
நாய் - குட்டி , குருளை
நெல் - நாற்று
பயிர்கள் - நாற்று
பலா - கன்று
பனை - வடலி
பாம்பு - குட்டி , பார்ப்பு
புலி - குட்டி , குருளை
பூனை - குட்டி, பறழ்
மா - கன்று
மான் - கன்று ,குட்டி
மீன் - குஞ்சு
யானை – களவம், கன்று, போதகம்
வாழை – கன்று
வேம்பு - கன்று
மூங்கில் - கன்று

## இலைப் பெயர்கள்

| முதற்பெயர் | சினைப்பெயர் |
|---|---|
| தென்னை | கீற்று |
| பனை | ஓலை |
| நெல் | தாள் |
| புல் | தாள் |
| வாழை | இலை |

| | |
|---|---|
| மா | இலை |

**பிஞ்சுப் பெயர்கள்**

| முதற்பெயர் | சினைப்பெயர் |
|---|---|
| தென்னை | குரும்பை |
| பனை | குரும்பை, நுங்கு |
| மா | வடு |
| பலா | மூசு |
| வாழை | கச்சல் |

**உயிரினங்களின் குரல் மரபு**

| | |
|---|---|
| அணில் | கீச்சிடும் |
| ஆடு | கத்தும் |
| ஆந்தை | அலறும் |
| எருது/ காளை | முக்காரமிடும் |
| எருமை | முக்காரமிடும் |
| கரடி | உறுமும் |
| கழுதை | கத்தும், கேவும் |
| காக்கை( காகம்) | கரையும் |
| கிளி | பேசும், சொல்லும் |
| குதிரை | கனைக்கும் |
| குருவி | கீச்சிடும் |
| குரங்கு | அலப்பும் |
| கோட்டான் | கூப்பிடும், அலறும் |
| கோழி | கொக்கரிக்கும் |
| சிங்கம் | க்ர்ச்சிக்கும் |
| சேவல் | கூவும் |
| தவளை,வாத்து | கத்தும் |
| தேவாங்கு | அழும் |
| தேனீ | இரையும்,ரீங்காரம் செய்யும் |
| நரி,ஓநாய் | ஊளையிடும் |
| நாய் | குரைக்கும் |
| பசு | கதறும் |
| பல்லி | சொல்லும் |
| பன்றி | உறுமும் |
| பாம்பு | இரையும், சீறும் |
| புலி | உறுமும் |

| | |
|---|---|
| புறா | குறுகுறுக்கும் |
| பூனை | சீறும் |
| மயில் | அகவும் |
| மாடு | கத்தும் |
| யானை | பிளிறும் |
| வண்டு | இரையும் |
| வானம்பாடி | பாடும் |

## தொகுதி மரபு

| சொல் | தொகுதி |
|---|---|
| ஆ | நிரை |
| ஆடு | மந்தை |
| ஒளி | கற்றை |
| கல் | குவியல் |
| காலாள் | படை |
| சுருட்டு | கட்டு |
| சேனை | திரள் |
| தானியம் | கதிர் |
| தென்னை | தோப்பு |
| பறவை | கூட்டம் |
| நூல் | பந்து |
| நெல் | குவியல் |
| பல் | வரிசை |
| பனை | தோப்பு , காடு |
| பழம் | சீப்பு, குலை |
| புல் | கற்றை |
| பூ | கொத்து |
| மணி | மாலை |
| மரம் | சோலை, காடு |
| மலர் | மாலை |
| மாடு | மந்தை |
| யானை | பந்தி |
| வாழை | தோட்டம், தோப்பு |

## வேறு சில மரபுச் சொற்கள்

| | |
|---|---|
| ஆடு மேய்ப்பவன் | இடையன் |
| யானை செலுத்துபவன் | பாகன் |
| தேர் செலுத்துபவன் | பாகன் |
| பாம்பாட்டுபவன் | பாம்பாட்டி |

| | |
|---|---|
| வேட்டையாடுபவன் | (வேடன்) வேட்டைக்காரன் |
| வாகனம் செலுத்துபவன் | சாரதி |
| யானையின் மலம் | இலத்தி |
| மாடு, எருமை, என்பவற்றின் மலம் | சாணம் |
| ஆட்டு மலம் | பிழுக்கை |
| கழுதை மலம் | விட்டை |
| காகம், குருவி என்பவற்றின் மலம் | எச்சம் |
| மிளகாய், கத்தரி என்பவற்றின் வித்து | விதை |
| நெல், கடுகு முதலியவற்றின் வித்து | மணி |
| மா,பலா முதலியவற்றின் வித்து | கொட்டை |
| நெல்,கோதுமை என்பவற்றின் உள்ளீட்டுப் பொருள் | அரிசி |
| அவரை,உழுந்து என்பவற்றின் உள்ளீட்டுப் பொருள் | பருப்பு |

முன் மட்டை

## *Gyikg; guprpy; guPlirf;fhd*

**கட்டுரைகள் 100**

**மொழிவிருத்தி**

***தரம் 3, 4, 5***

**புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டது**

**லங்கா புத்தகசாலை**
**கொழும்பு – 12**

**பிரபல எழுத்தாளர்**

**கே. வி. குணசேகரம்**
**அதிபர்**

பின் மட்டை

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய அதிபர் திரு.கே.வி.குணசேகரம் எழுதிய தரம் 3, 4, 5 மாணவர்களுக்கான கட்டுரைகளும் மொழி விருத்தியும் தற்பொழுது வெளி வந்துள்ளது. திரு.கே.வி.குணசேகரம் ஒரு சிறந்த ஆசிரியர், ஆளுமையுள்ள அதிபர், கடமை உணர்வுடைய ஒப்பற்ற கல்வி நிர்வாகி, ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கரைத்துக் குடித்தவர். இதனால் அவரது பாடசாலையில் ஆரம்பக் கல்வி சிறந்து விளங்குகிறது.

அவர் எழுதும் கட்டுரைகள் பரீட்சைக்கு வரக் கூடியவை.அத்துடன் அறிவைப் பெருக்கக் கூடியவை. அத்துடன் மாணவர்களின் தமிழ் ,விஞ்ஞானம், சுற்றாடல், அழகியல் ,பொதுஅறிவு போன்ற பாடங்களின் அறிவை வளர்க்கக் கூடிய பல தகவல்களை உள்ளடக்கியவை. தரம் ஒன்றில் இருந்து க.பொ.த.சாதரணப் பரீட்சை மாணவர்கள் வரை படித்துப் பயன் பெறக் கூடியவை. ஓர் ஆளுமை உள்ள அதிபரின் இக் கட்டுரைகள் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகும்.

**ஆசிரியன்**